விலை சதம் 5

முதற் பதிப்பு — பக்கங்கள் 4

"சுதந்திரன்"
விளம்பர விபரங்கள்
சுதந்திரனில் ஒப்பந்தத்தின் பேரில் விளம்பரம் செய்ய விரும்புகிறவர்களும், அவசரகால அறிவித்தல்களுக்கு விரும்புகிறவர்களும் எழுதுங்கள்,
மானேஜர்,
"சுதந்திரன்"
194 A. தட்டாரத் தெரு கொழும்பு.

Telegrams: 'SUTANTIRAN' COLOMBO
ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

சுதந்திரன்

THE "SUTANTIRAN."

(A TAMIL DAILY OF THE TAMIL SPEAKING PEOPLE)
REGISTERED AS A NEWSPAPER AT THE G. P. O.

இலங்கையினதும் இலங்கைவாழ் தமிழ்ப் பேசும் மக்களதும் சுதந்திரத்திற்காக வெளிவருவது.

"சுதந்திரன்"
(தினப் பதிப்பு)
சந்தா விபரம்
தனிப் பிரதி சதம் 5
8 மாதச் சந்தா ரூ. 6-00
6 மாதச் சந்தா " 12-00
1 வருடச் சந்தா " 24-00
மானேஜர்,
"சுதந்திரன்"
194 A, தட்டாரத் தெரு, கொழும்பு.

Phone: 3411
நாமார்க்கும் குடியல்லோம்

புத்தகம் 1 | கொழும்பு, சர்வஜித்து வரு கார்த்திகை மீ 30உ திங்கட்கிழமை — Colombo, December, 15, 1947 — ஹிஜிரி 1367 ஷபர் பிறை 1 | இதழ் 194

'தலைகுனிந்து தாள்பணிந்து பிச்சை கேட்க தமிழன் தயாராயில்லை'

சம அந்தஸ்தும், சுய மதிப்பும்தான் வேண்டுகிறோம்

வாக்காளர்கள் எங்கள் எஜமானர்கள், பிரதிநிதிகளாகிய நாங்கள் ஊழியர்கள்

வரவேற்பு விழாவில் பொன்னம்பலம் வீர கர்ஜனை

இலங்கை எல்லோருக்கும் பொது — நலபலன்கள் யாவருக்கும் பங்கு

ஒற்றுமைக்கு வழிகோலுமாறு பேராசிரியர் உபதேசம்

கொழும்பு, டிச. 14

பேராசிரியர் எப். எச். வி. குலசேகரம் அவர்கள் சென் பீட்டர்ஸ் கல்லூரி முன்றலில் நேற்று கொழும்புத் தமிழ் மக்கள் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் பாராளுமன்ற அங்கத்தவர்களுக்கு அளித்த வரவேற்பு விழாவிற்கு தலைமை வகித்துப் பேசியபோது தமது தலைமைப் பேருரையில் "இலங்கையில் தெற்கே உள்ளவர்களுக்கு எவ்வளவு சொந்த முண்டோ அவ்வளவுசொந்தம் வடக்கே உள்ளவர்களுக்கும் உண்டு" என்று கூறினார்.

"பல சாதிகளையும் பல சமூகத்தவர்களையும் கொண்ட 60 லட்சம் மக்களுக்கு உரியதாகும் இந்த இலங்கையாகிய பெரிய தோட்டம்."

"இதன் பங்குகளோ பிரிக்கப்படாத சொரியலானதாகும்."

"இந்த அழகிய தோட்டத்தில், வயல் நிலங்களும் மாறும் சாகுபடிகளும் உண்டு. எந்த ஒரு சமூகத்தினருக்கும் இந்தப் பயிர் வகைகளைச் சொந்தமாகக்கொள்ளுவதற்குப் பிரததியேக உரிமை கிடையாது. இது திண்ணம்."

பேராசிரியர் குலசேகரம் தொடர்ந்து பேசியதாவது:-

"நாங்கள் இன்று இங்கு கூடியிருப்பது பாராளுமன்றத்தில் அங்கத்தவர்களாயிருக்கும் யாழ்ப்பாணக் குடாநாட்டுப் பிரதிநிதிகளையும், திரிகோணமலைப் பிரதிநிதியையும் கௌரவிப்பதற்காகத்தானாகும்.

இலங்கைத் தமிழர்களாகிய நாம் யாழ்ப்பாணத்தையே எங்கள் தாய்நாடெனக் கைக்கொள்ளுகிறோம். ஆகவே கொழும்பிலிருப்பவர்களாகிய நாங்கள் வடமாகாணத் தேர்தல் தொகுதிகளில் மிகவும் கவனம் எடுத்துக்கொள்ளுகிறோம். இன்று இங்குபல்லாயிரக்கணக்காகநீயர் எல்லீரும் கூடியிருப்பது வடமாகாணப் பிரதிநிதிகளில் நம்பிக்கை வைத்திருக்கிறீர்கள் என்பதைத் தெளிவாகக் காட்டியுள்ளது.

மேலும் பேராசிரியர் குலசேகரம் சொன்னதாவது:-

"எங்கள் பாராளுமன்றப் பிரதிநிதிகள் தங்களின் சொந்தப் பிரதிநிதிகளல்லர், அவர்களைத் தேர்ந்தனுப்பிய வாக்காள மக்களின் பிரதிநிதிகளேயாவர். எதிர்க்க வேண்டுமென்ற ஒரு காரணத்திற்காக அவர்கள் எதிர்க்கட்சியில் இருந்துஅரசாங்கத்தைத்தடைசெய்வார்களேயானால அவர்கள் மீது வாக்காளர்கள் ஏமாற்றமடையத்தான் செய்வர்.

"இலங்கையிலுள்ளவர்களாகிய நாங்கள் எங்களுடைய இலங்கை மிகவும் சிறியது என்பதை மறந்து விடுகிறோம். நான் முதன் முதல் கொழிகாமத்திலுள்ள தமிழ்ப் பள்ளிக்கூடத்திற்குச் சென்றபொழுது ஆங்கு ஒரு பெரிய இலங்கைப் படத்தைப் பார்த்தேன். அப்பொழுது எங்கள் இலங்கை பெரும் பெரிய தேசம் என்று நினைத்தேன். ஆனால் பிறகு யாழ்ப்பாணத்திலுள்ள மத்திய கல்லூரிக்குச் சென்றபொழுது அங்கு உலகப்படத்தைப்பார்க்க நேரிட்டது. அகில இலங்கை ஒரு சின்னஞ் சிறிய புள்ளியாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

பெருத்த தேசங்களாகிய ஐரோப்பா, அமெரிக்காவில் உள்ளவர்கள் சமாதானமாக வாழ்கிறார்கள். ஐந்து சாகியத்தாரையும் 60 லட்சம் மக்களையும் கொண்ட இலங்கையில் வாழ்பவர்களாகிய நாங்கள் உண்மையில் பரஸ்பரம் ஒற்றுமையாக வாழ்வதில் கஷ்டமிருக்கவே மாட்டாது.

"வகுப்புவாதம் இலங்கையில் இல்லை என்று ஒருவன் சொல்லுவானாயிருந்தால் அவனை ஏமாற்றுக்காரன் என்றுதான் நாம் சொல்ல வேண்டும்.

நான் 30 வருடங்களாகக் கொழும்பில் ஜீவிக்கிறேன். ஆனால் பொது மக்களிடையே தெற்கேயாவது, வடக்கேயாவது வகுப்புத் துவேஷத்தைப் பிரதியட்சமாகக் கண்டது கிடையாது.

வடமாகாணத்தவர்கள், யாழ்ப்பாணக் கண்டத்துடன் இலங்கை ஒரு தொடுக்கப்பட்ட தீவு என்று எண்ணுவதை நிறுத்திக்கொண்டால்தங்களின் நிலைமையை விளங்கிக் கொள்ளுவார்கள். அதேபோல தெற்கே உள்ள சிங்கள மக்களும் இலங்கை தங்களின் சொந்தம் என்றுஎண்ணுவதையும் யாழ்ப்பாணம் ஒரு வேண்டப்படாத தொடர்பு என்று கொள்வதையும் நிறுத்திக் கொண்டால் இரு பகுதியாரின் மனதிலும் உள்ள தப்பான எண்ணங்கள் மறைந்துவிடும். அத்துடன் தெற்கேயுள்ளவர்கள் இததீவின் அதிகாரததில் யாழ்ப்பாணத்தவருக்கு உரிமை இல்லையென்று சொல்லுவதையும் நிறுபாட்டிக்கொண்டால ஒரு தொந்தரவும இராது.

"1935-ம் ஆண்டில் மந்திரி சபை அமைதத விதமும், இன்று மந்திரி சபை அமைகப்படடுள்ள முறையும் வடமாகாணததவரிடையே தங்களை வேண்டுமென்றே தெறகே உள்ளவர்கள் ஒதுக்கி வைக்கிறார்கள் என்னுப எண்ணததை உண்டாகி விட்டது."

"இலங்கையாகிய எங்கள் தோட்டத்திற்கு 101 விஜயம் செய்யும் ஏஜெண்டுகள் உண்டு. அவர்கள்ஒற்றுமையாகக் காரியங்களை நடத்தாவிட்டால்தோட்டத்தால் நற்பயனை அடைய முடியாது. அத்தோட்டம் வருமானம் கொடுக்காவிட்டால் அந்நியர்களிடம் அடைவு வைக்கப்படுவதுசகஜந்தானே!"

"ஐக்கிய அரசாங்கத்தில் இங்கிலாந்து, வேல்ஸ், ஸ்காட்லாந்து, அங்கம் வகிப்பது உங்களுக்குத் தெரியுமல்லவா? இப்பொழுது தேசங்களும் ஒரு பாராளுமன்றத்தையே வைத்திருக்கின்றன. மூன்று நூற்றாண்டுகளுக்கு மேலாக அவர்கள் ஒற்றுமையாக ஜீவித்து வருகிறார்களல்லவா? ஸ்காட்டிஷ்காரர் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் பெரும் பதவிகளை வகிக்கவில்லையா? அவர்கள் பிரிட்டிஷ் பிரதம மந்திரிகளாகக்கூட இருந்திருக்கிறார்கள். இது சரித்திர உண்மை."

இலங்கை "ஸ்கொச்மன்"களாகிய யாழ்ப்பாணத்தவர்கள் ஏன் அப்படி பதவிகளை எங்கள் பாராளுமன்றத்தில் வகிக்கக்கூடாது? அப்படி திரு ஜீ ஜீ பொன்னம்பலம் பிரதமராக வந்தால் "டெம்பிள்ட்ரீஸ்" இல்லதில இப்பொழுதுள்ள புததகோவிலுடன் ஒரு ஹிந்து கோவிலை ஏறபடுததிகொள்ளலாம்.

நமக்கு இப்பொழுதுதோற்றுமாப்போல எதிர்காலம் அவ்வளவு இருட்டாக இல்லை.

எங்கள் பாராளுமன்றப் பிரதிநிதிகள் இரண்டு விஷயங்களை உடனே தீர்த்துக்கொள்ளவேண்டும் அவையாவன:-

(1) தேசிய பாஷை,

(2) தேசியக் கொடி ஆகியவாம்.

பகுத்தறிவைப் புகத்தி ஒற்றுமையின் இலங்கையைக் குறிக்கும் ஒரு தேசியக் கொடியை உண்டாக்கிக் கொள்வார்களென்று நான் நம்புகிறேன்.

தேசியப் பாஷையைப் பொறுத்தமட்டில், தென்னிலங்கையில் தேசியம் முரட்டுத்தனமாகவும் ஒரு சாகியம்-ஒரு மதம்-ஒரு பாஷையை உண்டாக்க மாட்டாது என்று நம்புகிறோம்.

"சிங்களம் தமிழ் ஆகிய இரண்டு பாஷையும் அழிக்கப்படாது, ஆங்கிலம் எண்ணங்களை வெளியிடும் பாஷையாகவும், வர்ததகம், வியாபாரம் முதலியவற்றிற்கு உதவியாகவும் இருக்க வேண்டுமென்று நாம் விரும்புகிறோம்.

திரு பொன்னம்பலம் வாசகில் வல்லமையுடையவர். இராமனுதன், அருணாச்சலம், கனகசபை, சபாபதி முதலியவர்கள் இலங்கைத் தமிழரை அரசியல் வானில் தூக்கிவைததவர்களாவர். ஆனால் எங்களுடைய காலத்தில் தமிழ் மக்களுக்காகத் தியாகங்களை திரு பொன்னம்பலம் போன்று ஒருவரும் செய்யவில்லை இது உண்மை. திரு பொன்னம்பலம் சுயநலம் கருதி பிருந்தால் இன்று அரசியலமன்றததிலோ, நீதிமன்றததிலோ உயர் பதவியை வகித்திருப்பார். ஆனால் அவர் தமிழ் மக்களின் சார்பாகவே எப்பொழுதும் நின்றுள்ளார். சூதாட்டத்தில் தோல்வி ஏற்படுவது சகஜம். ஆனால் திரு பொன்னம்பலததில் நாம நம்பிக்கை இழக்கவில்லை.

திரு செல்வநாயகத்தையிட்டு பேராசிரியர் குலசேகரம் குறிப்பிட்டதாவது:-

நான் இன்று ஒரு பொது அறிவு வினாவிற்குப் பதில் அளிப்பேனாயிருந்தால், திரு செல்வநாயகததைப் போன்று ஒரு தமிழ்த் துரைமகன் இலங்கையில் இன்று இல்லையென்றே கூறுவேன். அதைக் கண்ணை மூடிக்கொண்டு சொல்லிவிடலாம். திரு செல்வநாயகததின் நேர்மை, நீதி, சீலம், நமபிக்கையை எந்தச் சாகியத்தவனும் எதிர்க்க முடியாது.

"திரு கே. கனகரத்தினம் ஒரு சமாதானப் பிரியர்."

"திரு சிவபாலனும் நானும் ஒரு பள்ளிக்கூடததில் படித்தவர்கள்."

"திருவாளர்கள் வன்னியசிங்கம், இராமலிங்கம், குமாரசுவாமி ஆகிய மிகுதி காங்கிரஸ் பிரதிநிதிகள் இளவல்கள் தான்; அவர்கள் எவருக்கும் நம்பிக்கை அளிக்கும் தரத்தவர்களாவர்.

திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் பதுலளிக்கையில் கூறியதாவது:-

"எல்லாப் பகுதிகளிலுமிருந்து திரள் திரளாகக் கூடியவர்களை இப்படி கௌரவித்தமைக்காக எனது மனமார்ந்த நன்றியறிதலை தெரிவிக்கிறேன்.

நாங்கள் வட இலங்கையிலுள்ள பொது மக்களால் அனுப்பப்பட்டவர்கள். அவர்களுடைய கட்டளைப்படியே நாங்கள் நடப்போம். உங்களுமூலமாக அவர்களுக்கும் இலங்கையில் மற்றும் பகுதிகளிலுள்ள எச்சாதிப் பொது ஜனங்களுக்கும் எங்கள் நன்றியறிதலைச் செலுத்துகிறோம்.

இச்சபையில தமிழரைவிட வேறு சாதியாரும் இருப்பதைப் பார்தது பரவசமடைகிறோம். திரு தாயக்காவும் திரு மாட்டின்ஸ், மாக்கான் மரைகார் முதலியவர்களும் "தமிழ் காங்கிரஸ்" சேர்ந்தவர்கள். இவர்களுக்கு சாதி வேற்றுமையால் எங்களுடைய காங்கிரஸில் இடமில்லாவிடாலும் கொள்கையொற்றுமையால் எங்களோடு சேர்ந்தவர்களாவர்.

இப்படிப்பட்ட சந்தோஷகரமான சந்தர்ப்பத்தில் விவாதத்தைக் கிளப்ப எனக்கு விருப்பமில்லை.

எங்கள் மேல் பொது ஜனங்கள் வைத்திருக்கும் நம்பிக்கைக்குத் துரோகமாக நாங்கள் ஒன்றும் செய்யமாட்டோம். உங்களுடைய சம்மததோடு தான் எதையும் செய்வோம். எங்களுடைய கொள்கைகளை ஆதரியாதவர்கள் எங்களுக்குள் பிளவுகளை ஏற்படுத்த எத்தனிக்கிறார்கள். அவர்களை நான் மனமுருகிக் கேட்பதென்னவெனில் ஒரு ஒற்று கட்சிக்குள்ளே இன்னொரு கட்சியை உண்டாக்காதீர்கள். தமிழரெலலோரும் ஒற்றுமையாக நின்று எங்களுடைய மரியாதைக்குப் பங்கம் ஏற்படாத வழியில் சிங்கள சகோதரர்களோடு ஒத்துழைக்கப் பார்ப்போம்.

இவ்வளவு காலமும் நாங்கள் அந்நியர் ஆட்சியிலிருந்து அவர்கள் எங்களைப் பிழையான வழி பிற்கொண்டு சென்றமையால் இந்நிலைக்கு வந்தோம். எதிர்காலத்தில் ஒற்றுமை வர வேண்டுமென வாரும்புகிறோம்.

ஆங்கிலேய பாராளுமன்ற முறை இங்கிலாந்திலொழிய வேறெத் தேசத்திலாவது வெற்றி இல்லை. ஒரே சமூகதாரடங்கிய பிரான்ஸ், ஜெர்மனி, துருக்கி முதலிய தேசங்களில் பிரிட்டிஷ் முறையைப் புகுத்தி அதை நடத்த முடியாமற் திண்டாடினார்களானால் பல ஜாதியாருள்ள, பல மதங்களுள்ள இலங்கையிலே இந்த முறையை நிறுவுதல் சாததிய

(4-ம் பக்கம பார்க்க)

திரு பீட்டர் கெனமன் தெரியப்பட்டார்

கொழும்பு முனிஸிபல் சபை உப தேர்தல் முடிவு

கொழும்பு, டிச. 14

கொழும்பு முனிஸிபல் சபையின் கொட்டாஞ்சேனை தொகுதி உபதேர்தல நேற்று காலை நடைபெற்றது காலேஜ் வீதியிலுள்ள வீதியிலுப இருந்தவாக்காளிக்கும் இடங்களில வாக்காளமைதியாகச் சென்று வாக்களிததனர். காலேஜ் வீதியிலிருந்த வாக்களிகும் இடததில ஆள் மாறுபடமாக வாக்களிததவர்கள் சிலர் கண்டு பிடிக்கப்பட்டுள்ளனர். இத்தொகுதி தேர்தல் முடிவு விபரம் நேற்றிரவு அறிவிக்கப்பட்டது முடிவு விபரம் வருமாறு:-

திரு பீட்டர் கெனமன் 1630 வாக்குகள்
திரு ஆர்.எப். விக்கிரமசிங்கா 674 வாக்குகள்
சேத வோட்டுகள் 82

திரு. பீட்டர் கெனமன் 956 வாக்குகள் அதிகப்படியாகப் பெற்று கொட்டாஞ்சேனை தொகுதி அங்கத்தவராகத்தெரியப்பட்டார்.

டில்லிக்கு இலங்கை இந்தியன் காங்கிரஸ் தூது

இரு பிரதம மந்திரிகளின் சமரசப் பேச்சுக்கு உதவி செய்யும்

திரு. சௌமிய மூர்த்தி தொண்டமான் அறிக்கை

கொழும்பு, டிச. 14

இலங்கை—இந்திய பிரச்சினை சமரசமாகத் தீர்ததுக் கொள்ள இந்தியா பிரதம மந்திரி பண்டித ஜவஹர்லால் நேருவுடன் சம்பாஷணை நடத்த இலங்கை பிரதம மந்திரி திரு. எஸ். சேனநாயகா டிசம்பர் 6-ந் தேதியன்று விமான மார்கமாக டில்லிக்குப் பயணமாவார். டிசம்பர் 28-ந் தேதி பண்டித நேருவைச் சந்தித்துப் பேசிவிட்டு சென்னையிலும் பம்பாயிலும் தலைவர்களைச் சந்தித்துவிட்டு ஒரு வார காலத்தில் ஜனவரி 5-ந் தேதி பிரதிநிதிகள் சபை கூடுவதற்குள் திரும்பி வருவார்.

திரு சேனநாயகாவுடன் பாதுகாப்பு, வெளிநாட்டுஇலாகா சிரந்தரக்காரியதரிசி திருகே வை நதிய நாதனும் பிரதம மந்திரி காரியதரிசி திரு என். டபிள்யு அதுகொரளையும் செல்வார்கள் இரு பிரதம மந்திரிகளும் டில்லியில் சம்பாஷணை நடத்தும் சமயம் இலங்கையிலுள்ள இந்திய கமிஷனர் திரு வி. வி கிரியும் இந்தியாவிலுள்ள இலங்கை சர்க்கார் பிரதிநிதி ஓ. எம். டபிள்யூ. எச் டி சில்வாவும் விஜயம் செய்திருப்பார்கள். திரு கிரி அடுத்த வாரம் இந்தியாவுக்குப் பயணமாகிறார்.

இந்தியர் காங்கிரஸ் தூது கோஷ்டி

டில்லியில் இலங்கை இந்திய சம்பாஷணை நடைபெறும் போது இரு பிரதம மந்திரிகளும் பாரபட்சமின்றி நேர்மையும் நியாயமுமான சமரச முடிவுக்குவர உதவியாக இருக்கும் பொருட்டு இலங்கை இந்திய காங்கிரஸ தூது கோஷ்டியொன்றை டில்லிக்கு அனுப்பிவைக்க இலங்கை இந்தியன் காங்கிரஸ் காரியங்கமிட்டி தீர்மானித்திருக்கிறது இலங்கை இந்தியன் காங்கிரஸ் தலைவர் திரு சௌமிய மூர்ததி தொண்டமான் தலைமையில் கீழக்கண்டவர்கள அடங்கிய தூதுக்கோஷ்டி டில்லிக்குப் பயணமாகும்:-

செனடசபை உபதலைவர் திரு பெரியசுந்தரம்; இலங்கை இந்தியன் காங்கிரஸ மாஜி தலைவர் திரு. ஏ. அசீஸ் இலங்கை பிரதிநிதிகள் சபை அங்கத்தினர்களான டி ஆர் மோததா, கே. ராஜலிங்கம், டி. ராமானுஜம் எல். எம். சுப்பையா

இத்தூதுகோஷ்டி டில்லிக்குச் செல்வதன் நோக்கததைப் பற்றி இலங்கை இந்தியன் காங்கிரஸ தலைவர் திரு சௌமிய மூர்ததி தொண்டமான் பததிரிகைகளுக்கு கீழ்க்கண்ட அறிக்கையை விடுததிருக்கிறார்.—

இலங்கை இந்திய பிரச்சினை பற்றி டில்லியில் இந்தியா பிரதம மந்திரி பண்டித ஜவஹர்லால் நேருவும் இலங்கை பிரதம மந்திரி திரு டி. எஸ் சேனநாயக்காவும் நடத்த விருக்கும் சமரசப்பேச்சு வெற்றிகரமாக முடிவுறமென்று இலங்கை வாழ் இந்தியர்கள் நம்பிக்கையுடன் எதிர்பார்க்கின்றனர். உலக நிலைமைகள் துரிதமாகவும் ஸதிரமின்றியும் மாறிக்கொண்டு வருகின்றன. அதனால் ஏற்படும் உலகக் கொந்தளிப்புகளை எதிர்த்து சமாளிக்கவேண்டுமானால், இந்தியாவும் இலங்கையும் இதர தென்கிழக்கு ஆசிய நாடுகளும் ஒன்றுபடடு ஏகோபித்து வேலைசெய்யவேண்டும். இந்தப் பகுதி இப்பொழுதுதான் அடிமைததனத்திலிருநது விடுபட்டு சுதந்திரததை அடையவிருக்கிறது. இந்நாடுகளின் பிரச்சினைகள் எல்லாம் பெரும்பாலும் இந்நாடுகள் அனைததுக்கும் பொதுவானவையாகவே இருக்கின்றன. இந்தியாவும் இலங்கையும் சம்பந்தப்பட்டமட்டில் இலங்கைவாழ் இந்தியர்களின் உரிமைகளையும் அந்தஸதையும் பற்றிய பிரச்சினைகள் முக்கியமானவையாகும். இரு நாடுகளும் ஒன்றிற்கொன்று சமீபதிலிருப்பதாலும் பல வதத்களிலும் பல விஷயங்களில் இந்நாடுகளும் பூர்வீக காலந்தொட்டு பந்தமுடையவைகளாக இருப்பதாலும் இரு நாடுகளுக்கடையே நெருங்கிய நேச பான்மையான உறவுகளிருக்க வேண்டியது அவசியமாகும். ஆகவே அப்படிப்பட்ட உறவை இந்தியா தனது கௌரவத்துக்கும் சுயமரியாதைக்கும் பங்கம் ஏற்படாதவாறு ஏற்படுத்த இலங்கைவாழ் இந்தியர் பிரச்சினைகள் நேர்மையான முறையில் தீர்க்கப்படவேண்டியது மிகவும் அவசியமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளம்பரம்

வெள்ளவத்தை - பம்பலப்பிட்டி பகுதிகளில் ஒவ்வொரு வீடுகளுக்கும் 'சுதந்திரன்' பத்திரிகை ஆள் மூலம் தினசரி கொடுப்பதற்கு ஒழுங்குகள் செய்திருக்கிறபடியால் தேவையானோர் கீழ்க்கண்ட விலாசத்திற்கு மனுச்செய்யவும்.

சந்தா பின்வருமாறு:-

1 மாதம்	ரூ. 2-00
3 மாதம்	ரூ. 6-00
6 மாதம்	ரூ. 12-00
12 மாதம்	ரூ. 24-00

மானேஜர்,
'சுதந்திரன்',
194 A, தட்டாரத்தெரு,
கொழும்பு.

சுதந்திரன்

THE "SUTANTIRAN."

194 ஏ, தட்டாரத் தெரு, கொழும்பு.
போன்: 5411.

சர்வஜித்து ஞு கார்த்திகை மீ 30உ
திங்கட்கிழமை

பேராசிரியர் பொன்மொழி!

கும்பகர்ணன் தூங்கினானும்.

இலங்கையில் சண்டை நடக்கிறது. மூன்று லோகமும் நடுங்குகிறது. "ராம-ராவண யுத்தத்துக்கு ராம-ராவண யுத்த மேதிகர்" என்று முன்னோர் சொல்லியிருக்கிறார்கள். அப்படிப்பட்டசண்டையின்அதிர்ச்சியிலேகூட, கும்பகர்ணனுடைய தூக்கம் கலையவில்லை ஆயிரக்கணக்கான ஆடுமாடு குதிரைகளின் காலில் கர்மையான கத்திகளைக் கட்டி அவன் மேலே நடக்கச் சொன்னார்கள். தூக்கம் கலையவில்லை. ஏழெட்டு மேகங்களை அவன் காதுக்குள்ளே போய் இடியிடிக்கச் சொல்லிராவணன் கட்டளையிட்டானும், மேகங்கள்போய்இடித்தனவாம். கும்பகர்ணன் குறட்டை நிற்கவேயில்லை.

மேற்படி கும்பகர்ணனைப் போல நம் நாட்டில் சில சிங்கள வகுப்புவாதிகள் உண்டு அண்டங்கள் அத்தனையும் இடிந்துவிழுந்தாலும்காதுகேட்காத செவிடர்போன்று சிங்கள ராஜ்யத்தில் சிந்தனையாக இருப்பார்கள். இன்று இந்நாட்டில் வகுப்புவாதத் தீ கொழுந்துவிட்டு எரிவதற்கு இவர்களின் ஒரு ஜாதி- ஒரு பாஷை- ஒரு மதக் கொள்கைதான் முக்கிய காரணமாகும். சிங்கம் போன்றே சிங்கத்தையும் சிங்களத்தையும் பிடித்திருக்கிறார்கள். இவர்கள் திருந்தவேமாட்டார்கள். இவர்கள் திருந்தாவிட்டாலும் சிங்களப் பொது மக்களாவது இவர்களின் வகுப்புவாதக் குறட்டையால் அள்ளுப்படாதிருக்கவேண்டும். இதுவே தமிழ் மகாஜனங்களின் விருப்பமாகும். அதை நேற்று முன் தினம் வெகு அழகாக இலங்கை சர்வகலாசாலை கணிதப் பேராசிரியர் திரு எப். எச். வீ. குலசேகரம் தமிழ் மக்கள் சார்பாக எடுத்துக்கூறியிருக்கிறார். "இலங்கை பலஜாதிகளையும் பல சமூகத்தவர்களையும்கொண்ட அறுபது லட்சம் மக்களுக்கும் சொந்தமானதாகும். இதன் பங்குகளோ பிரிக்கப்படாத சொரியல்களாகும். எந்த ஒரு சமூகத்தினரும் இதைச் சொந்தமாக்கிக்கொள்ளுவதற்கு எவ்வித பிரத்தியேக உரிமையும் கிடையாது" என்பதுதான் பேராசிரியர் வாக்கு.

அவரது பொன்மொழிகளை நாம் இலங்கை மகன் ஒவ்வொருவனுக்கும் சமர்ப்பிக்கிறோம். இதை ஒவ்வொருவனும் தனது லட்சியமாகக் கொண்டு வாழ்வானேயானால் சிங்களவர், தமிழர் வேற்றுமை பறந்துவிடும். வேண்டுமென்றே இலங்கை மந்திரி சபையைச் சிங்கள மயமாக்கினோம் என்று சிங்கள வகுப்பு வாதிகள் கூச்சலிடமாட்டார்கள். தமிழரும் சிங்கள அரசியல் வகுப்பு வாதிகள் தம்மைப் புறக்கணிக்கின்றனர், ஆகவே தனித்து வாழ்வோம் என்றும் எண்ண இடமுண்டாகாது. பேராசிரியரின் உணர்வு இலங்கை மக்களுக்கு சுதந்திரத்தையும் அமரத் தன்மையையும் கொடுக்கும் என்பது திண்ணம்.

கல்வி முறையிலுள்ள குறைபாடுகள்

யாழ்ப்பாணத்தில் கல்வி மந்திரி பேச்சு

யாழ்ப்பாணம், டிச 15

இலங்கையின் கல்வி மந்திரி மேஜர் ஈ. ஏ. நுகவெல சென்ற சனிக்கிழமை மாலையில் யாழ்ப்பாண மத்திய கல்லூரிப் பரிசளிப்பு விழாவில் தலைமை வகித்துப்பேசியபோது "மதஸ்தாபன கல்லூரிகளுக்கு அரசாங்கம் எவ்வளவு உதவிபுரியவேண்டும் என்னும் கேள்வி பலத்த வாக்குவாதத்திற்கும், ஏராளமானமுரண்பாடுகளுக்கும் இடமளித்துள்ளது' என்று கூறினார்.

தொடர்ந்து மேஜர் நுகவெல கூறியதாவது:- "மதஸ்தாபனங்கள் தங்கள் பள்ளிக்கூடத்தையிட்டு ஆவலுடனும், பயத்துடனும் இருக்கின்றன.

நிரந்தரமற்ற நிலையும், ஆவலும், பயமும் இந்நாட்டிற்குச் சேவை செய்துள்ள அநேக பள்ளிக்கூடங்களின் திறமையைக் குறைத்துவிடுமாகையால் இந்த அபாயத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுவிடும் என்பதை நான் உறுதி கூறுகிறேன்.

"மதஸ்தாபன பள்ளிக்கூடங்களும், அரசாங்கமும் ஒரு பொது வேலையில் பங்காளிகளாக இருக்கிறார்களல்லாமல் எதிர்க்கடை வைப்பவர்களல்லர்.

இது சம்பந்தமாக மந்திரி சபை மிகவும் கூடிய சீக்கிரத்தில் ஒரு தீர்மானத்தைக் கொடுக்கும்படி நான் கேட்கவிருக்கிறேன்." அனுபவக் கல்வி ஆலோசனைகள சம்பந்தமாக மேஜர் நுகவெல கூறியதாவது:-

"அவ்வாலோசனைகள் மிகவும் நல்லதுதான். வித்தியா கர்த்தரின் நோக்கம் ஒரு கலைச் சுற்றாடலில் பிள்ளைகளின் அறிவையும் வேலையையும் வெளிக்கொண்டு வருவதேயாகும், உபாத்தியாயர்களும் பணமும் போதிய அளவு கொடுக்க வசதிகள் ஏற்படுத்தப்படும். இப்பொழுதுள்ள எங்கள் கல்விமுறையிலுள்ள குறைபாடு மாணவர்கள் தங்கள் விருப்பத்திற்கும், திறமைக்கும் பொருந்திய முறையில் கல்வி பெறும் வசதி அளிக்கப்படாமையே யாகும். இக்குறைபாடுள்ள முறை தேசத் தேவைக்குப் பொருந்தாத ஆண்களையும் பெண்களையும் வருவிக்கின்றது.

ஒரு தமிழ் பாராளுமன்ற அங்கத்தவர் என்னை சமாதானசின்னத்தை இங்கு கொண்டு செல்லும்படியாகச் சொன்னார். தேச ஜீவியத்தில் வடக்கேயுள்ளவர்களும், தெற்கேயுள்ளவர்களும் பங்கு பற்றிக் கொள்ளவேண்டும். யாழ்ப்பாணம் தேசியச் சுழியில் சேர்ந்து கொள்ளாவிட்டால் அது தனது நிற்கும்படி விட்டுவிடப்படும். தமிழருக்கும் சிங்களவருக்கும் இடையில் உள்ள தூரம் இனிக் குறுக்கே நிற்கமாட்டாது. எல்லாம் அம்ஸங்களிலும் இருசாகியத்தாரும் ஒற்றுமையாக முன்னேற வேண்டும்"

இலங்கை சர்வகலாசாலை கிரிக்கெட் கோஷ்டி

ஹைதராபாத்துக்குப் பயணம்

கொழும்பு, டிச 14

ஹைதராபாதில் நடைபெறும் இந்திய சர்வகலாசாலைக் கிரிக்கெட் பந்து விளையாட்டுப் போட்டியில் கலந்து கொள்ள சனிக்கிழமைஇரவு இலங்கை சர்வகலாசாலைக் கிரிக்கெட் கோஷ்டியைச் சேர்ந்த 14 பேர்கள் ஹைதராபாத்துக்குப் பயணமானார்கள் இக்கோஷ்டியின் மானேஜர் கே. ஆர். டி. சமரவிக்ரம. மற்றவர்கள்:-

எம். ரைட், ஏ. பெரைரா, எச். மொலகொட, எம். பெரைரா, சி. டி. எல். பெர்ணண்டோ, எம். வந்துரகல, ஜி. டி. கபுகொடுவ, ஜே. கூரே, ஆர். ஏ. எச். குணரத்ன, வி, சின்னத்தம்பி, ஆர். கூக், எச் டி தம்பையா, ஆர். ராஜசிங்கம்.

இந்தியா-சைனா விமானப் போக்குவரத்து ஒப்பந்தம்

பிரிட்டனுடன் விமானப்போக்குவரத்து நடத்த புதிய இந்திய கம்பெனி

கராச்சியில் முஸ்லிம் லீக்கின் ரகசியக் கூட்டம்

நாங்கிங், டிச. 13

சீனத்தில் இந்தியாவின் ஸ்தானிகராக இருக்கும் திரு. கே. பி. எஸ். மேனன் பின்வருமாறு தெரிவித்தார்:- இந்தியாவுக்கும், சீனாவுக்கும் விமானப் போக்கு வரத்து நடத்த இந்திய சர்க்காரும் சீன சர்க்காரும் விமான ஒப்பந்தம் செய்து கொள்வதற்காக இந்திய விமான தூதுக்கோஷடியொன்று இன்னும் 3 மாத காலத்திற்குள் இங்கு வந்து சேரும். இப்பொழுது ஒரே ஒரு சீனக் கம்பெனியான சீன நேஷனல் ஏர் வேஸ் கார்ப்பரேஷன் சீனாவுக்கும் கல்கத்தாவுக்குமிடையே விமானப் போக்கு வரத்து நடத்தி வருகிறது ஆனால் இந்திய சர்க்காருக்கும் சீன சர்க்காருக்குமிடையே விமான ஒப்பந்தம் ஏற்பட்ட பிறகு இந்திய விமானக் கம்பெனிகளும் சீனக் கம்பெனிகளும் இரு நாடுகளிலுமுள்ள பல முக்கியமான நகர்களை இணைக்கும் இந்திய-சீன விமானப் போக்குவரத்துகளை நடத்தலாம்.

இந்தியா-பிரிட்டன் விமானப்போக்குவரத்துக்கு புதிய இந்திய கம்பெனி

புதுடில்லி, டிச. 13

இந்தியாவுக்கும் பிரிட்டனுக்குமிடையில் விமானப் போக்குவரத்து நடத்த "எய்ர் இந்தியா இண்டர் நேஷனல் லிமிடெட்" என்ற ஒரு புதிய கம்பெனி ஆரம்பிக்கப்படும். அதன் மூலதனத்தில் 49 சத வீதம் இந்திய சர்க்காருக்கும் 20 முதல் 25 சத வீதம் 'எய்ர் இந்தியா' டாட்டா கம்பெனிக்கும் இருக்கும். மீதமுள்ள பங்குகள் பொதுஜனங்களுக்கு இருக்கும்.

ஜூன் வரை இறக்குமதித் தடை

டாலர் பஞ்சத்தை முன்னிட்டு இப்பொழுது அமுலிலிருந்துவரும் இறக்குமதித் தடைகள் 1948 ஜூன் மாதம் வரை நீடிக்கத்திருக்கும். இறக்குமதிக்குக் கொடுக்கப்படும் பொது லைசென்சுகள் ஜனவரி மாதம் முதல் ரத்து செய்யப்படும்.

யுத்தம் முடிந்ததும் நேத்தாஜி ராணுவத்தைச் சேர்ந்தவர்கள் சுதந்தரவாக்கு வந்த போது அவர் ஸிடமிருந்து பறிமுதல் செய்த சுமார் 6 லட்ச ரூபாயை இந்திய சர்க்கார் பறிமுதல் செய்து இம்பீரியல் பாங்கல போட்டிருக்கிறார்கள், அது யார் யாருக்கு எவ்வளவு பணம் சேர வேண்டுமென்பதை விசாரித்து அவர்களுக்குத் திருப்பிக் கொடுக்கப்படும்.

பிரிட்டிஷ் ராணுவ அதிகாரி கைது

முசோரி, டிச. 13

கள்ள ரேடியோ, ரிவால்வர், துப்பாக்கி வைத்திருந்ததாக பிரிட்டிஷ் ராணுவ அதிகாரியான கேப்டன் வியாட்டைப் போலிசார் கைது செய்தனர்.

காஷ்மீர் போர்

புதுடில்லி, டிச 13

ஊரி பிரதேசத்தில் இந்திய துருப்புகள் எதிரிகளைத் தாக்கி விரட்டியபோது 76 எதிரிகள் கொல்லப்பட்டனர்.

கிழக்கு பாகிஸ்தான் முஸ்லிம்களுக்குள் அடிதடி

டாக்கா, டிச. 13

ராஜாங்க பாஷையாக உருதுவையா அல்லது வங்காளியையா ஏற்படுத்தவது என்பது பற்றி ஏற்பட்ட தகராறில் இன்று முஸ்லிம்களுக்கிடையே கலகம் உண்டாகி அடிதடிகள் நடைபெற்றன.

கிழக்கு பாகிஸ்தான்-மேற்கு வங்காளஎல்லையில்பரபரப்பான நிலைமை ஏற்பட்டிருப்பதால் மால்டே, தீனபுரிபிரதேசங்களை அபாயகரமானவை என்று பிரகடனம் செய்து அங்குள்ள அதிகாரிகளுக்கு மேற்கு வங்க சர்க்கார் விசேஷ அதிகாரம் வழங்கியிருக்கின்றனர். போலிஸ் படைகள் மேற்குவங்காளத்தில் அதிகரிக்கப்பட்டு வருகின்றன.

பங்களூர் கலகம்

பங்களூர், டிச 13

நேற்று ஆரம்பமான வகுப்புக்கலகம் இன்றும் நடைபெற்றது. ஊரடங்குச் சட்டத்தையும் மீறி ஒருவர் வீட்டை முற்றுகையிட்ட ஜனங்களை அவர் சுட்டதால் இருவர்மாண்டனர். கல்லெறிகளும்கலகடக்கொலைகளும் நடைபெற்றன. ராணுவ பந்தோபஸ்து பலப்படுத்தப்பட்டிருக்கிறது. இக் கலகத்தில் இதுவரை 8 பேர்கள் மாண்டனர். 77 பேர்கள் காயமடைந்தனர்.

கராச்சியில் லீக்கின் ரகசியக் கூட்டம்

கராச்சி, டிச. 13

கவர்னர் ஜெனரல் மாளிகையில் முஸ்லிம் லீக் காரியக்கமிட்டிக் கூட்டம் ரகசியமாக நடைபெற்றது. இரண்டாவது கூட்டம் பிரதம மந்திரி மாளிகையில் நடைபெற்றது.

சென்னை முஸ்லிம் லீக்

சென்னை, டிச. 13

கராச்சியில் நடைபெறும் முஸ்லிம் லீக் கூட்டத்தில் கலந்துகொள்ள, சென்னை மாகாண முஸ்லிம் லீக் தலைவரும் சென்னை பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான ஜனாப் எம். முகமது இஸ்மெயிலும் மாகாண முஸ்லிம் லீக் காரிய தரிசி கே. டி. எம். அகமது இப்ராஹீமும் நேற்று விமானத்தில் கராச்சிக்குப் பயணமானார்கள்.

ஜனாப் கே. எம். ஸீதிசாகிப் என். எம். அன்வர், ஜெமேலியா ஆகியோரும் அதே விமானத்தில் புறப்பட்டுச் சென்றார்கள்

சென்னை முஸ்லிம் லீக்கில் பிளவு ஏற்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. சென்னை மாகாணத்திற்கு முஸ்லிம் லீக் தேவையில்லையென்றும்அதைக் கலைத்தவிட வேண்டுமென்று வாலிபர்கள் கோருகின்றனர்.

ஹைதராபாத் சச்சரவு சம்பந்தமாக சென்னை மாகாண எல்லை ஜில்லாக்களில் முஸ்லிம்கள் வீடு சோதனை செய்யப்பட்டது சம்பந்தமாக சென்னை பாராளுமன்றத்தில் 5 பணி நேரமும கேள்விகளும் பதில்களுமாக விவாதம் நடைபெற்றது. உள்நாட்டு மந்திரி தக்க வாறு பதிலளித்தார்.

எஸடேட் நிலவரி குறைப்பு மசோதா

சென்னை, டிச. 13

சென்னை எஸ்டேட் நிலவரி குறைப்பு மசோதா நேற்று சென்னை பாராளுமன்றத்தில் நிறைவேறியது. மசோதாவிலிருந்து பத, தர்ம இனாம் நிலங்களை விலக்க வேண்டுமென்று கொண்டுவரப்பட்ட திருத்தம் தோல்வியுற்றது.

கைத்தறிகளுக்கு யோகம்

54, 60. 70. 80, 90, 100. 120 நம்பர்களான மெல்லிய இழை நூலில் பிரிட்டனிலிருந்து வருகிறது. இனிமேல் இறக்குமதியாகும் நூல் தடங்கலின்றி சரிவர சட்டை செய்யலாமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த வகையான நூல் வேஷ்டிகள் அங்க வஸ்திரங்கள், ஷர்ட்டிங் பீஸகள் முதலிய செய்வதற்கு உபயோகமானதாயிருக்கும் இதுநூல் ரேஷன் கார்டுள்ளவர்களுக்கு வினியோகிக்கப்படும்.

எங்கு வேண்டுமானாலும் அனுப்பலாம்

மாகாணத்தில் கைத்தறி ஜவுளி சரக்கு பெருவாரியாக குவிந்து கிடப்பதாக சர்க்கார் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. ஆகையால் இந்தியாவின் இதர மாகாணங்களுக்கு இச்சரக்கை ஏற்றுமதி செய்ய மேலும் சில சலுகைகள் அளிக்கப்பட்டிருக்கிறது. அதாவது இப்பொழுது குவிந்து கிடக்கும் சரக்குகள் செலவழியும் வரைதான் அதிக ஜவுளிகளை ஏற்றுமதி செய்யலாம். ஏற்கனவே பெர்மிட் வழங்கப்பட்டிருப்பது தவிர இதர பிரிவினருக்கும் புதிய ஏற்றுமதி பெர்மிட்டுகள் வழங்கப்படும். இப்பிரிவினர்களின் விவரம் மாகாண ஜவுளி கமிஷனரால் அறிவிக்கப்படும். குறிப்பிடப்பட்டுள்ள வரம்பிற்குள் இந்தியாவின் எந்த இடத்திற்கு வேண்டுமானாலும் பெர்மிட் வைத்திருப்பவர்கள் தடையின்றி கைத்தறி ஜவுளி ஏற்றுமதி செய்யலாம என்று சர்க்கார் குறிப்பு கூறுகிறது.

லஞ்சம் வாங்கிய 51 அதிகாரிகளுக்கு தண்டனை

லஞ்சம் வாங்கியதாக குற்றம் சாட்டப்பட்ட அதிகாரிகளில் ஜனவரி மாதம் முதல் இதுவரை 51 அதிகாரிகளுக்கு தண்டனை விதிக்கப்பட்டிருப்பதாக சென்னை பாராளுமன்றத்தில் சட்ட மந்திரி தெரிவித்தார்.

500 லட்ச ரூபாயும் 10 வருட காலமும்

கொழும்புத் துறைமுகத்தைக் கிழக்கின்சிறந்த துறைமுகமாக்கும்

கொழும்பு, டிச. 14

500 லட்சம் ரூபாய் செலவுடன் 10 வருடம் முயற்சி செய்தால் கீழைத் தேசத்தின் மிகச் சிறந்த துறைமுகத்தில் ஒன்றாகக் கொழும்புத் துறைமுகம் ஆகிவிடும் என நம்பப்படுகிறது

இது சம்பந்தமாக துறைமுகக்கமிஷன் தலைவர் ஹோனு ஒரு துறைமுக மாதிரியை தயாரித்துள்ளார். இன்னொன்று தயாரிக்கப்பட்டுவருகிறது.

பிரிவிக் கவுன்ஸிலுக்கு அப்பீல்

கொழும்பு, டிச. 14

சட்ட விரோதமான கூட்டத்தைச் சேர்ந்திருந்ததாக மூன்று மாத தண்டனை விதிக்கப்பட்ட பாராளுமன்ற அங்கத்தினரான திரு எச் டி அபயகுணவர்தனவும் 9 மாத தண்டனை விதிக்கப்பட்ட கொழும்பு நகரசபை அங்கத்தினர் திரு எம். ஜி மெண்டிசும் பிரிவிக கவுன்ஸிலுக்கு அப்பீல் செய்ய ஏற்பாடு செய்து வருவதாகத் தெரிகிறது.

புடவைக் கட்டுப்பாடு ஒழியவேண்டும்

புடவை வியாபாரிகள் கருத்து

கொழும்பு, டிச. 14

கொழும்பில் உள்ள புடவை வியாபாரிகள் புடவைக்கட்டுப்பாடு ஒழிய வேண்டிய காலம் வந்து விட்டதெனத் தீவிரமாக அபிப்பிராயப்படுகின்றனர் இது சம்பந்தமாக நமது நிருபரிடம் ஒரு வியாபாரி பின்வருமாறு கூறினார்:- "அரசாங்கம் வேண்டுமானால் அவசிய துணி மணிகளின் விலையைக் கட்டுப்படுத்தட்டும். அதன் மூலம் வியாபாரிகள் கொள்ளை லாபத்தைத் தடை செய்யட்டும் ஆனால் கட்டுப்பாட்டை இனி மேலும் நீடிப்பதற்கு எவ்வித அர்த்தமும்காரணமும கூறமுடியாது.

புதுவரிகளின் காரணமாக பட்டுகள் இறக்குமதி குறைக்கப்படும் என்றும அவர் தெரிவித்தார். இந்நிலைமையின் காரணமாக ஏற்கனவே தம்மிடம் உள்ள பட்டு முதலிய வற்றை அதிக விலைக்கு வியாபாரிகள் விற்று அமித லாபம் அடிக்கத்தொடங்கியுள்ளார்கள் எனவும் தெரியவருகிறது

ஆஸதிரேலியா கோதுமை களஞ்சியம்

இந்தியா, இலங்கை, பிரிட்டனுக்கு 22 கோடி புஷல் ஏற்றுமதி

கான்பெர்ரா, டிச. 13

ஆஸ்திரேலியாவில் அறுவடையாகப் போகும் கோதுமையிலிருந்து இந்தியா, இலங்கை, பிரிட்டனுக்கு சுமார் 22 கோடி புஷல் ஏற்றுமதி செய்யப்படும் என்று இன்று அறிவிக்கப்பட்டது.

டச்சு பிரதமர் பட்டேவியா விஜயம்

பட்டேவியா, டிச. 13

டச்சு பிரதம மந்திரி டாக்டர் லூயிஸ் பீல் இன்று இங்கு வருகிறார். அவருடன் டச்சு குடியேற்ற நாட்டு மந்திரியும் சமூக விவகார மந்திரியும் வருகிறார்கள். டச்சுக் கிழக்கிந்திய தீவுகளின் சமஷ்டி அரசியல் நிறுவுவதுபற்றி நேரில் கலந்து பேசி முடிவு செய்ய இக்கோஷடி இங்கு விஜயம செய்கிறது.

(ராய்ட்டர்)

ஜப்பான் சமாதான உடன்படிக்கை

ரஷியாவுக்கும்சைனாவுக்கும் பிரிட்டனின் பதில்

லண்டன், டிச. 13

ஜப்பான் சமாதான உடன்படிக்கை பற்றி ஆலோசிக்க தூரகிழக்கு கமிஷன் கூடுவது பற்றி ரஷியாவும சைனாவும தங்கள கருத்துக்களைத் தெரிவித்து பிரிட்டனுக்கு அனுப்பிய கடிதக்களுக்கு இன்று பிரிட்டன் பதில்கள் அனுப்பியது.

நாங்கிங் நகரில் நான்கு வல்லரசுகளின் மகாநாடு கூட்ட வேண்டுமென்ற ரஷியாவின் கருத்தை பிரிட்டன் ஏற்றுக் கொள்ளவில்லை. 11 நாடுகளுடன்பர்மாவையும் பாகிஸ்தானையும் சேர்த்துள்ள தூரகிழக்கு கமிஷனைக் கூட்ட வேண்டுமென்று பிரிட்டன் விருப்புகிறது. தூரகிழக்கு கமிஷன் முடிவுகளை ரத்துசெய்ய நான்கு வல்லரசுகளுக்கு உரிமை இருக்க வேண்டுமென்ற சைனாவின் கோரிக்கையையும் பிரிட்டன் நிராகரிக்கிறது.

மேற்கு ஜெர்மனி சம்பந்தமாக பிரிட்டனும் அமெரிக்காவும் நிதி, பொருளாதாரம் பற்றி செய்துள்ள ஒப்பந்தம் புதன் அல்லது வியாழக்கிழமை வெளியிடப்படும். (ராய்ட்டர்)

சீன உள்நாட்டு யுத்தம்

30,000 கம்யூனிஸ்டு துருப்புகள் தாக்குகின்றன

ஷாங்கை, டிச. 13

மேற்கு மஞ்சூரியாவில் 30,000 கம்யூனிஸ்டுகள் முக்டனுக்கு 80 மைல் தூரத்திலுள்ள சிஞ்சௌ நகரைக் கைப்பற்ற தாக்குதல் ஆரம்பித்திருக்கிறார்கள். வடசீனத்திலிருந்து சீனத் துருப்புகள் மஞ்சூரியாவுக்குள் பிரவேசிக்க முடியாதபடி பீப்பிங்-முக்டான் ரயில்பாதையை அழித்து விட்டார்கள். டீன்ஸ்டின் நகருக்கும் கிழக்கு ஹோப்பெய் நகரத்துக்குமிடையே ரயில் போக்கு வரத்து நடைபெற முடியாதவாறு ரயில் பாதையை கம்யூனிஸ்டுகள் சேதப்படுத்தி விட்டனர்.

(ராய்ட்டர்)

மற்றொரு ஆசிய நாட்டில் பிரிட்டிஷ் ஆட்சியின் சம்பூரண அஸ்தமனம்

ஜனவரி4ம்தேதிபகல்9-40மணிக்கு பர்மா சுதந்திர சூரியன் உதயம்

பிரிட்டிஷ் கொடிகள் இறக்கப்பட்டதும் பிரிட்டிஷ் கவர்னர் வெளியேறி, பிரிட்டிஷ் யுத்தக் கப்பலில் இலங்கைக்கு புறப்படுவுருவார்

அரசாங்க அதிகாரிகள், ஊழியர்கள் அனைவருக்கும் ஒரு மாதச் சம்பளம் சுதந்திர "போனஸ்"

ரங்கூன், டிச. 13

1948-வது வருடம் ஜனவரி மாதம் 4-ம் தேதி பகல் 9-40 மணிக்கு பர்மா சுதந்திரத்தைப் பெறுகிறது. அப்பொழுது பிரிட்டன் தனது அதிகாரத்தை பர்மாவுக்கு மாற்றும். பிரிட்டிஷ் யூனியன் ஜாக் கொடி அரசாங்க மாளிகையிலிருந்து இறக்கப்பட்டு அவ்விடத்தில் நட்சத்திரங்கள் பொறித்த மூவர்ண பர்மிய தேசியக் கொடி பறக்க விடப்படும்.

உடனே பர்மாவின் கவர்னர் சர் ஹியூபர்ட் ரான்சும் அவரது மனைவியாரும் அவருடைய சிப்பந்திகளும் அரசாங்க மாளிகையைவிட்டு வெளியேறி, ரங்கூன் வீதிகள் வழியாக பவனி சென்று சுதந்திர பர்மாவிலிருந்து வெளியேறுவதற்காக ரங்கூன் துறைமுகத்தில் அவர்களை ஏற்றிச் செல்லக் காத்துக்கொண்டிருக்கும் "பர்மிங்ஹாம்" என்ற யுத்தக் கப்பலில் ஏறி இலங்கையை நோக்கிப் புறப்படுவார்.

அரசாங்க மாளிகையில் சுதந்திர பர்மாக் குடியரசின் முதலாவது தலைவராக யாங்வே ஸாப்வாவான ஸாஷவேதைக் குடிபுகுவார்.

ஜனவரி 4-ம் தேதி அதிகாலையிலிருந்தே சுதந்திர தினக் கொண்டாட்டங்கள் ஆரம்பமாகும். நாடெங்கும் பர்மிய முரசுகள் முழங்கும் கோயில்களிலெல்லாம மணிகள் ஒலிக்கும்.

நாடெங்கும் யூனியன் ஜாக் கொடிகள் இறக்கப்பட்டு பர்மிய சுதந்திரக் கொடிகள் உயர்த்தப்படும்.

நாடெங்கும் நடைபெறும் சுதந்திர தினக் கொண்டாட்டத்திற்காக செலவு செய்ய அரசாங்கம் 5 லட்ச ரூபாய் அனுமதித்திருக்கிறது. ரங்கூனில் அதற்காக பொது ஜனங்களிடமிருந்து நிதியும் திரட்டப்படுகிறது.

அரசாங்க அதிகாரிகள் ஊழியர்கள் அனைவருக்கும் ஒரு மாதச் சம்பளம் சுதந்திர போனஸாகக் கொடுக்க அரசாங்கம் அனுமதியளித்திருக்கிறது. குறுகிய கால தண்டனை பெற்ற கைதிகளும் சிறைகளிலிருந்து விடுவிக்கப்படுவார்கள்.

(ராய்ட்டர்)

யாழ்ப்பாண ஆசிரியர் சங்கக் கூட்டம்

யாழ்ப்பாணம், டிச. 13

ஆசிரியர்களுக்கு விதவை-அநாதை உபகாரச் சம்பள உரிமையை உடனேயே வழங்கி அமுல் நடத்த வேண்டும் என்று கூறும் ஓர் தீர்மானம் யாழ் நகர் ஆசிரியர் சங்கத்தின் வருடாந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மேற்படி வருடாந்தக் கூட்டம் இந்துப்பெண்கள் கல்லூரியில் ஆசிரியர் கே வி. மயில்வாகனம் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கீழ்க்கண்டவர்கள் உத்தியோகஸ்தர்களாக தெரிவு செய்யப்பட்டனர்

வி. டபிள்யு. அல்வினேஸ தலைவர்

எஸ. சிவபாத சுந்தரம் உப தலைவர்.

ஈ. சபாலிங்கம் காரியதரிசி.

செல்வி சி. எம். சின்னையா தனாதிகாரி.

கணக்குப் பரிசோதகர் டி. கே. ராஜசேகரம் நூல் நிலைய அதிகாரி என். மாணிக்கம் இடைக்காடார் வட மாகாண ஆசிரிய சங்க நிர்வாக சபைப் பிரதிநிதிகள், தலைவர், உப தலைவர், காரியதரிசி, எஸ சபாரத்னசிங்கி, எம். சின்னையா, எம். கார்த்திகேசன், எஸ். மஹாலிங்கம், டி. சீனிவாசகம்.

வட மாகாண ஆசிரிய சங்கத்தைத் தொழிற் சங்கமாகப் பதிவு செய்ய வேண்டுமென்று கோரும் ஓர் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

இந்துப் பெண்கள் கல்லூரித் தலைமை ஆசிரியை ஸ்ரீ மொரவானி குழந்தைகளின் கல்விப் பயிற்சிபற்றி ஓர் பிரசங்கம் நிகழ்த்தினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரான்சில் 32 ரஷியர்கள் கைது

பிரஞ்சு-ரஷிய தகராறு

பாரிஸ், டிச 13

பிரான்ஸ ரஷியா யுத்த நஷ்டஈடு ஒப்பந்தக்தை ரத்து செய்ததைப்பற்றிக் குற்றஞ்சாட்டி வர்த்தக சமரசப் பேச்சை ரஷியா முறித்துக்கொண்டது சம்பந்தமாக-பிரஞ்சு சர்க்காரின கொள்கையை இன்று பிரஞ்சு பாராளுமன்றம் ஏற்றுக்கொண்டது. அதற்குச் சாதகமாக 411 வோட்டுகளும் பாதகமாக 183 வோட்டுகளும் கிடைத்தன

இதைப்பற்றி ஆக்டிங் அந்நிய நாட்டு மந்திரி பேசிய போது, சோவியத் யுத்த நஷ்டஈடு தூதுகோஷ்டியை பிரஞ்சு சர்க்கார் வெளியேற்றியதை நியாயத்தை எடுத்துக்காட்டினார்.

யுத்த நஷ்டஈடு ஒப்பந்தத்தை நிறைவேற்றி வைக்கவும், அது சம்பந்தமாக சோவியத் பிரதிநிதிகளுடன் சம்பாஷிக்கவும் பிரான்ஸ் ஆவலாக இருப்பதாகவும் தெரிவித்தார்.

ரஷியாவின் குற்றச்சாட்டுக்குப் பதிலளித்து பிரஞ்சு சர்க்கார் அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள். அதுசம்பந்தமாக ரஷியா பிரான்ஸுக்கு அனுப்பிய கடிதம் பிரஞ்சு சர்க்காருக்குக் கிடைப்பதற்கு முன் அது மாஸ்கோ ரேடியோவில் பிரசாரம்செய்யப்பட்டதால் அக் கடிதத்தைப் பிரான்ஸ் பெற்றுக் கொண்டதாகக் கருதப்படமாட்டாதென்றும் தெரிவித்தார், ஆகவே டிசம்பர் 9-ம் தேதி ரஷியா அனுப்பிய கடிதத்திற்கு பிரான்ஸ் பதிலளிக்காது.

சென்ற மாதம் சோவியத் யுத்த நஷ்டஈடு முகாமை பிரஞ்சு அதிகாரிகள் கைப்பற்றிய பின் இதுவரை 32 ரஷியர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள், அவர்களை ரஷியாவுக்குப் பிரஷ்டம் செய்வார்கள். சோவியத் யுத்த நஷ்டஈடு தூதுகோஷ்டியைச் சேர்ந்த 7 ரஷியர்களும் கைதியானார்கள். அவர்களை வெளியேறி ரஷியாவுக்குத்திரும்பிச் செல்லும்படி பிரஞ்சு சர்க்கார் இட்ட கட்டளையை மறுக்கிறார்கள்.

இவர்களை விடுதலை செய்யும்படி பாரிசிலுள்ள சோவியத் தூதர்கள் அனுப்பிய இருகண்டனக் கடிதங்களையும் அவைகளுக்கு சர்க்கார் அளித்த பதிலும்வெளியிடப்பட்டன. கைதியானவர்களில் பலர் நாட்டைவிட்டு வெளியேறிவிட்டதாக பதிலளிக்கப்பட்டிருக்கிறது.

வால் வெள்ளி கொழும்பிலும்தெரிந்தது

கொழும்பு, டிச. 13

வானத்தில் தென் திசையில் தென்னமொக்காவிலும் தென்னாப்பிரிக்காவிலும் ஆஸ்திரேலியாவிலும் தென்பட்டதாகச் சொல்லப்பட்ட புதிய வால் நட்சத்திரம் கொழும்பிலும் நேற்றிரவு தோன்றியதாக வான சாஸ்திரி திரு. ஏ. டி. ஜி பிரிட்டோ கூறுகிறார்.

நால்வர் மகாநாடு

லண்டன், டிச. 12

ஜெர்மன் யுத்த நஷ்டஈடு சம்பந்தமாக ரஷியா மற்ற மூன்று வல்லரசுகள் மீது குற்றஞ்சாட்டிப் பேசியது அவதூறுகுப் என்று பிரிட்டிஷ் அந்நிய நாட்டு மந்திரி தெரிவித்தார். அது உண்மைக்கு மாறானதென்று பிரஞ்சு அந்நிய நாட்டு மந்திரி தெரிவித்தார். பெர்லினிலிருந்து நால்வர் மகாநாட்டில் ஜெர்மன் கருத்தைத் தெரிவிக்க வர முயன்ற ஜெர்மன் பொதுஜன காங்கிரஸின் 17 பிரதிநிதிகளுக்கு அனுமதிச்சீட்டு வழங்க பிரிட்டன் மறுத்துவிட்டது.

கைதிகளுக்கு விவசாயவசதி

கொழும்பு, டிச. 13

உள்நாட்டு விவகாரம் கிராமாபிவிருத்தி மந்திரியாரின் நிரந்தரக் காரியதரிசி திரு வி. குமாரசாமி மாஜி கைதிகள் உபகார சங்கத்தில் நேற்று மாலை ஒரு பிரசங்கம் நிகழ்த்தினார்.

அரசாங்கம் சமீபத்தில் ஓர் சிறையை விவசாய வசதியுள்ள ஓர் சூழலில் நிறுவ உத்தேசித்திருப்பதாகவும், விடுதலைஅடையும் கைதிகள் அதில் வேலைசெய்ய வசதி அளிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

'தென்னாப்பிரிக்க இந்தியருக்கு நீதி வழங்குவோம்'

பண்டித நேரு வாக்குறுதி

பணப்பங்கீட்டில் பாகிஸ்தானிடம் இந்தியாவின தாராள மனப்பான்மை

சிறிய கைத்தொழில்கள், பெரிய கைத்தொழில்கள், கூட்டுறவு இயக்கம், விவசாய அபிவிருத்திக்கு உபகமிட்டிகள்

புதுடில்லி, டிச 12

தென்னாப்பிரிக்க இந்தியர் பிரச்னை பற்றி இந்திய பாராளுமன்றதில் கேள்விகளுக்குப் பதிலளிக்கும்போது பிரதம மந்திரி பண்டிதநேரு பின்வருமாறு பதிலளித்தார்:-

சென்றவருடம் ஐக்கியதேசப் பொதுச்சபை நிறைவேற்றிய தீர்மானம் அமுலிலிருப்பதாகவே நமக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த வருடம் இந்தியா பிரேரித்த தீர்மானத்திற்கு, முக்கியமான பிரச்னைகளுக்கு மூன்றில் இரண்டுபங்கு வோட்டுகள் கிடைக்க வேண்டுமென்று சபையின் விதி இருந்தபோதிலும் நமது தீர்மானத்திற்கு அதிகப்படியான வோட்டுகள் கிடைத்திருக்கின்றன. மூன்றில் இரண்டுபங்கு வோட்டுகள்பெறுவதில் வோட்டுகளே குறைவாக இருந்தன. இனி இந்திய சர்க்கார் எடுத்துக் கொள்ளப்போகும்நடவடிக்கை பற்றி இவ்வளவு சீக்கிரத்தில் எதுவும் தெரிவிப்பதற்கில்லை. தென்னாப்பிரிக்க இந்தியருக்கு நீதி வழங்கப்பட வேண்டுமென்று நாம் செய்துள்ள திட்டங்கள்பத்திலிருந்து நாம் பின்வாங்கப்போவதில்லை. நமது நோக்கம் ஐக்கியதேச சாசனக் கொள்கையத் தழுவியதாகும்

பாகிஸ்தானிடம் இந்தியாவின் தாராளமனப்பான்மை

இந்திய பாராளுமன்றத்தில் உதவிப் பிரதம மந்திரி இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே நிதி சம்பந்தமாக ஏற்பட்ட சமரச முடிவுகளை சமர்ப்பித்துப் பின்வருமாறு தெரிவித்தார்:-

இந்தியா பாகிஸ்தானிடம் தாராள மனப்பான்மையுடன் நடந்துகொண்டமையும் காட்டியிருப்பதை புதிய நாடான பாகிஸ்தான உணருமென்று நம்புகிறேன். பிரிவினையின்போது இருந்த 400 கோடி ரூபாயில் பாகிஸ்தானுக்கு75கோடிபாகம் பிரித்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதோடு இதுவரை பாகிஸ்தானுக்கு 20 கோடி ரூபாய் கொடுக்கப்பட்டுள்ளது. பாகிஸ்தான் நாணய முறைப்படியும் ரிசர்வ்பாங்க் உத்தரவின் படியும் நோட்டு செலாவணியை அடிப்படையாகக் கொண்ட வீதாச்சாரத்தின்படி ஸடெர்லிங்நிதி பாகிஸ்தானுக்கு டிசம்பர் 31-ம் தேதிவரை அவ்வப்போது தேவைக்குத்தக கொடுக்க ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது.

பாகிஸ்தானில் பிரஞ்சு ஸ்தானிகர்

காரச்சி, டிச. 12

பாகிஸ்தானில் லியோன் மார்ஷல் என்பவர் பிரஞ்சு ஸ்தானிகராக நியமிக்கப்படிருக்கிறார்.

இந்தியாவுக்கு தேவையான ரயில்வே எஞ்சின்கள் உற்பத்தி

புதுடில்லி, டிச. 11

போக்குவரத்து மந்திரி ஜான் மத்தாய் இந்தியா பாராளுமன்றத்தில் பின்வருமாறு தெரிவித்தார்.-

இந்தியாவுக்கு தேவையான ரயிலவே எஞ்சின்கள் இந்திய சர்க்கார் ரயிலவே எஞ்சின் உற்பத்திக் தொழிற்சாலைகளிலும் மற்ற தொழிற்சாலைகளிலும் செய்யப்படும். இன்னும் 15 வருடங்களுக்குள் கழிகப்படும் எஞ்சினகளுக்காக புதிய எஞ்சின்களும் உறபத்திசெய்ய முடியும். அதிகமான ரயில பாதைகள் போடப்படின் தேவையைப் பூர்த்தி செய்வது கஷடம் அதறகாக இப்பொழுதுள்ள ரயில பாதைகளில் சில பகுதிகளை மின்சார மயமாக்கி ரயிலவே நீராவி எஞ்சின்களின் உபயோகம் குறைககப்படும்.

பொருளாதாரக்கமிட்டி

புதுடில்லி, டிச 11

பண்டிதநேரு தலைமையில காங்கிரஸ நியமித்த பொருளாதாரக் கமிட்டி இன்று கூடி, 4 உப கமிட்டிகளைநியமித்தது (1) சிறிய கைத்தொழில்களைப் பற்றி ஆராய திரு, குமரப்பா, அச்சுத பட்டுவர்த்தன், என்ஜி ரங்கா ஆகியோரடங்கிய சப்கமிட்டி, (2) பெரிய கைத்தொழில்களைப்பற்றி ஆராய டாக்டர் ஜான் மத்தாய், திரு சங்கர ராவ் தேவ், திரு ஜெயப்பிரகாஷ நாராயண் ஆகியோரடங்கிய சப்கமிட்டி, (3) கூட்டுறவு ஸதாபனங்களைப் பற்றி ஆராய திரு. சங்கர ராவ் தேவ் திரு.எஸ.சத்தியநாராயண சின்ஹா ஆகியோர்அடங்கியசப்கமிட்டி (4)விவசாயத்தைப்பற்றி ஆராய திரு. எஸ். ஜி. ரங்கா, திரு. ஜெயப்பிரகாஷநாராயண், திரு. தூத்வாலா ஆகியோரடங்கிய சப்கமிட்டி.

நிர்மாணத் திட்டக் கமிட்டி

இன்று காங்கிரஸின் நிர்மாணதிட்டக் கமிட்டி கூடி, சென்ற 6 மாத காலத்தில் காங்கிரஸ ஸதாபனத்தின் நிர்மாணத் திட்ட இலாக செய்துள்ள வேலைகளைப்பற்றி பரிசீலனை செய்தது. இனிச்செய்யவேண்டிய வேலைகளைப்பற்றி ஆலோசித்து முடிவு செய்யும் நடைய கூட்டத்திற்கு மகாத்மா காந்தி விஜயம் செய்வார் ஆன்றைய கூட்டத்தில் திரு. சங்கர ராவ் தேவ், ஆச்சாரியா ஜுகல்கிஷோர், திரு. கிருஷ்ண தாஸஜாஜு, ஸ்ரீமதி. சுசேதா கிருபளானி ஆகியோர் விஜயம் செய்திருந்தனர்.

ஹைதராபாத் மந்திரி ராஜினாமா

ஹைதராபாத், டிச. 12

டில்லிக்குத் தூது சென்ற ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட தூதுக் கோஷ்டியினரில் ஒருவரான ஹைதராபாத் மந்திரி வெங்கட ரெட்டி அவரதுகட்சியின் கட்டளைப்படி தனது பதவியை ராஜினாமா செய்து செய்துவிட்டார்.

பங்களூரில் வகுப்புக் கலகம்

பங்களூர். டிச. 12

இன்று பங்களூரில் வகுப்புக் கலகம் ஏற்படவே கோட்டைப்பகுதியில் ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்பட்டதுகல்வீச்சால் சிலர் காயமடைந்தனர். ஒழுக்கஹீனமாக நடந்த மாணவர்களை கோட்டை ஹைஸ்கூல் ஆசிரியர் தண்டித்ததற்காக ஆசிரியர் தாக்கப்படவே அதன்காரணமாக வகுப்புக் கலமேற்பட்டது. சில கடைகள்குறையாடப்பட்டன கத்திக்குத்து சம்பவங்களும் ஏற்படவே போலிஸார் தடியடிப் பிரயோகமும் கண்ணீர் புகை பிரயோகமும் செய்தனர் இருவர் மாண்டனர். 10 பேருக்குக் கத்திக்குத்துக் காயங்கள ஏற்பட்டன. ஒருவர் கல்லடியால் காயமானார். ராணுவம் வரவழைக்கப்பட்டு ஊரடங்குச் சட்டமும் பிரயோகிகப்பட்டு அமைதி நிலை நாட்டப்பட்டிருக்கிறது.

காஷ்மீர் போர்

சாப், பெர்பட்டான், ஊரி முதலிய இடங்களில் எதிரிகள் விரட்டியடிக்கப்பட்டதால் ஜனங்கள் அப்பி தேசங்களில் அமைதியாகக் குடியேறிவருகிறார்கள். ஜம்மூமாகாணத்தில் 12 கிராமங்கள்மீது திடீரென ஆயிரம் முதல் மூவாயிரம்பேர் வரையுள்ள மலை ஜாதியார் படையெடுத்து வந்து கிராமங்களைத் தீக் கொளுத்தி குறையாடினர். அக்கிராமங்களிலுள்ள ஜனத்தொகை 7000 நூற்றுக் கணக்கான மக்கள் கொலலப்பட்டார்கள். ஆங்குள்ள காஷ்மீர் படைகள் பின்வாங்கும்படியாயிற்று. உடனே இந்திய துருப்புகள் விரைந்து சென்று எதிரிகளை விரட்டியடித்தனர்.

6 வருடகாலத்தில் 20 லட்சம் பவுண நஷ்டம்

பிரிட்டிஷ் பிலிம்முதலாளி ஆர்தர்ராங்க் கூறும்காரணம்

லண்டன், டிச. 12

பிரபல பிரிட்டிஷ் சினிமா படமுதலாளியான திரு. ஆர்தர் ராங்க் தனது சினிமாப்படஉற்பத்தி முயற்சியில் 1940 வது வருடமுதல் 6 வருடகாலத்தில் 20 லட்சம் பவுண் நஷ்டமடைந்துவிட்டார். 5 கோடி பவுண் முதலைத்தில் இவர் ஆரம்பித்த சினிமாப் படஉற்பத்திக் கம்பெனியின் பங்குகள் இன்று பலகுப் பரிவர்த்தனை மார்க்கெட்டில் திடீரென இறங்கிவிட்டது. இக்கம்பெனியைச் சேர்ந்த ஓடியன் தியேட்டரின் பங்கு மார்க்கெட்டில் 40 ஷில்லிங்குக்கு ஆரம்பமானதும் திடீரென 38 ஷில்லிங்குக்கு இறங்கி விட்டது பிலிம் முதலாளி ராங்க் சினிமாப்படம் உற்பத்தி செய்யும் தனது ஜெனரல் சினிமா யூனன்ஸ் கார்ப்பொரேஷனை தான் சேர்மனாக இருக்கும் ஓடியனுக்கு விற்க நிட்டம் போட்டிருந்த செய்தி வெளியானதே இதற்குக் காரணமாகும், ஓடியன் தியேட்டர் ஸ்தாபனத்திற்கு பிரிட்டனிலும் பிரிட்டிஷ் சாம்ராஜ்ய நாடுகளிலும் அநேக தியேட்டர்கள் இருக்கின்றன. யூனன்ஸ்கார்ப்பொரேஷன் தனது திட்டப்படி அடுத்த வருடத்தில் 36 படங்களை உற்பத்தி செய்ய 20 லட்சம் பவுண் தேவை இருப்பதால் அதை ஓடியன் தியேட்டருக்கு விற்க ஏற்பாடு செய்துள்ளார்.

கார்ப்பொரேஷன் நஷ்டமடையக் காரணம், 'சீசரும் கிளியோபாட்ராவும்'' என்ற படமும் அதைப்போன்ற படங்களும் புகழ் சம்பாதித்த போதிலும் பணம் சம்பாதிக்காமல் நஷடமுண்டுபண்ணி விட்டன என்று ஆர்தர் ராங்க் கூறுகிறார். (ராய்ட்டர்)

தென்மேற்கு ஆப்பிரிக்கா பிரச்னை

அமெரிக்காவின் கூற்று

நியூயார்க், டிச 12

தென்மேற்கு ஆப்பிரிக்காவின் நிர்வாக அறிக்கையை ஐக்கிய தேச தர்மகர்த்தா கமிட்டி பரிசீலனை செய்தது. அதன் தலைவரான அமெரிக்க பிரதிநிதி விவாத ஆரம்பத்திலேயே கமிட்டி தனது எல்லையை மீறி இப்பிரச்னையில் தலையிட்டிருப்பதாகத் தெரிவித்தார்.

இத்தாலியில் வேலை நிறுத்தம்

பாராளுமன்றத்தின் முன் ஆர்ப்பாட்டம்

போலிசார் தாக்கியதில் கம்யூனிஸ்ட் பிரதிநிதிகளுக்கு காயம்

ரோம், டிச 12

பொதுவேலை நிறுத்தம் செய்யும் தொழிலாளர்கள் இன்று இத்தாலி பாராளுமன்றத்தின் முன்புகூடி ஆர்ப்பாட்டம் செய்தனர். அவர்களைக் கலைக்க முயன்ற போலிசார் குண்டாந்தடிக்கு சில கம்யூனிஸ பிரதிநிதிகளும் பலியாயினர்.

அமெரிக்க விமானக் கப்பல்

லண்டன, டிச. 12

அமெரிக்க கடற்படையைச் சேர்ந்த விமானக்கப்பல் ஜெனேவா துறைமுகம் வந்திருப்பதாக ரோம் ரேடியோ தெரிவிக்கிறது. டிசம்பர் 15-ம் தேதி இத்தாலிய உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுநேச தருப்புகள் வெளியேறிய பின் அக்கப்பல் துறைமுகத்துக்குள் பிரவேசிக்கும். அதுவரை வெளியே நிற்கும்.

இலங்கையுடன் வர்த்தகம்

டச்சுத் தூதுக்கோஷ்டி வருகிறது

கராச்சி, டிச. 12

பாகிஸ்தான், இந்தியா, இலங்கை, பர்மா, மலேயா முதலிய இடங்களுடன் தொழில் தொடர்புகளை ஏற்படுத்துவது சம்பந்தமாய் ஆராய்வதறகாக ஓர் டச்சுத் தூதுக்கோஷ்டி தற்போது கராச்சி வந்துள்ளது.

சீன உளநாட்டு யுந்தம்

மாஸகோ. டிச 12

கூமின்டாங ராணுவ அரசயல் முக்கியத்தவமுளள நானிங்ராங நகரை சீன கமியூனிஸடுகள் வளைந்து கொண்டனர் சென்ற மாதம் ஹோனான், ஷேன்ஸி, ஹோப்பாய் போர் முனைகளில், 12169 சீன சர்க்கார் துருப்புகள் சேதமடைந்தன. 15 மாகாண நகரங்களை கமியூனிஸடுகள் கைப்பற்றினர்

சயாம் பொதுத் தேர்தல்

பாங்காக், டிச 12

ஜனவரி 29-ந் தேதி நடைபெறும் சயாம் பொதுத் தேர்தலுக்கு அபேட்சகர்கள் நியமனப் பத்திரக்களை தாக்கல் செய்து வருகிறார்கள். சயாம் பாராளுமன்றதிற்கு 100 பிரதிநிதிகள் தெரிந்தெடுக்கப்படுவார்கள்.

பல்கேரிய மந்திரி சபையில் 14 கமியூனிஸ்ட் மந்திரிகள்

சோபியா, டிச. 12

பல்கேரிய மந்திரி சபையில் 14 கமியூனிஸ்டுகள் மந்திரிகளாக இருப்பதாக இன்ற பிரதம மந்திரி டிமிட்ரவ் தெரிவித்தார்.

மூன்று யூதர்கள் உயிருடன் எரிக்கப்பட்டனர்

லண்டன் யூதர் விடுதலைக் கமிட்டியின் திட்டம்

அராபிய ரகசிய ராணுவ மகாநாடு

கெய்ரோ, டிச. 13

அராபிய நாடுகள் பாலஸ்தீனம் விஷயமாக என்ன நடவடிக்கை எடுப்பது என்பதுபற்றி சென்ற மூன்று தினங்களாக ரகசியமாக நடைபெற்ற அராபிய ராணுவப் பேச்சுகள இன்று முடிவுற்றன. யுதத்த திட்டங்கள் வகுக்கப்பட்டதாகத் தெரிகிறது.

ஜெருசலேம், டிச. 13

இன்று லிடியாவில் பி. ஓ ஏ ஸி. விமானக் கம்பெனியின் லொறியை அராபியர்களதாக்கி அதிலிருந்த மூன்று யூதர்களை உயிருடன் கொளுத்தி சாம்பலாக்கினர்.அதிலிருந்தமற்றஏழு பேர்களைக் காணவில்லை. அராபியர்கள் தப்பியோடிவிட்டனர். ஜெருசலேம் நகரில் மத்திய பகுதியில் 4 யூதசிறுவர் பல வெடிகுண்டுகளை வீசினர் அதனால் இருவர் காயமடைந்தனர். சில மோட்டார்கள் சேதமடைந்தன' இன்று ஜெருசலேம் நகர் குண்டு சப்தததால அதிர்ந்தது. பல மரணங்கள் நேரிட்டிருக்கும்.

யூதர் குடியேற்றம்

லண்டன், டிச. 13

பிரிட்டன் வெளியேறியதும் டெல்அவிவ் நகரில் 6000 யூதர் அகதிகள் இறக்கப்படுவார்கள் என்று யூதவிடுதலைக் கமிட்டி அறிவிக்கிறது. இத்துறைமுகதை பிரிடடிஷ் துருப்புகள காலிசெய்ததும் போர் ஆயுதங்களும் விமானத் தளவாடங்களும யூதர் பாதுகாப்புப் படைகளின் உபயோகதிற்காக இறக்கப்படும். இக்கமிட்டியினகிளறன, தலைமைக் காரியாலயம் நியூயார்க்கிலிருக்கிறது. 2000 பிரிடடிஷ் யூதர்களடங்கிய இக்கமிடடியின் கிளை லண்டனிலிருக்கிறது.

லண்டன் சர்வகலாசாலையிருக்கும் ரசல் பகுதியிலுள்ள ஐக்கிய தேச ஸ்தாபனக் கலைகாரியாலயததை அராபிய மாணவர்கள ஆர்ப்பாட்டம் நடததி கோஷங்கள் செய்தனர் கூட்டம் கூடியது. போலிசார் அவ்விடத்திற்கு விரைந்து வந்து கூட்டத்தைக் கலைத்தனர்.

அராபிய லீக் கூட்டம்

கெய்ரோ, டிச. 13

மத்திய கிழக்குப் பாதுகாப்பு, ஐக்கிய ஒபபந்தத் திட்டமொன்றை ஏற்படுத்த அராபிய நாடுகள் முயற்சிப்பதாக டமஸ்கஸிலிருந்து செய்தி கிடைத்திருக்கிறது. இததிட்டததில அராபிய நாடுகளுடன் கிழக்கு மத்தியதரைக் கடல் நாடுகளான கிரிஸ-ம் துருக்கியும் சேர்க்கப்படும். ஆகவே இது சம்பந்தமாக அராபிய நாடுகளின் யுத்த மந்திரிகள் கூடி ஒரு அராபிய ராணுவ மகாநாடு நடத்துவார்கள் என்று எகிப்திய பதரிரிகைகள் தெரிவிகின்றன.

அராபிய நாடுகள் ஐக்கிய தேச ஸ்தாபனசங்கதிலிருந்து விலகாதென்று லெபனான் பிரதம மந்திரி தெரிவித்தார்.

பாலஸதீனப் பாதுகாப்புப் போருக்கு ஈராக்கில் மும்முரமான முஸதீபுகள் நடைபெறுகின்றன.

கலை அறிவுப் போட்டி நிர். 2.

சரியான விடையும் பரிசு பெற்றோர் விபரமும்.

1	அ	ன்	னை
2	பி	ள	வு
3	ஆ	ட	ல்
4	ப	ண	ம்
5	அ	த்	தி
6	மா	த	ரி
7	சா	யா	து
8	கோ	வி	ல்
9	ஆ	ண்	பை
10	மா	ச	ம்

ஒருவரும் சரியான விடை அனுப்பவில்லை. ஆகவே ஒரு பிழையுடன் விடையனுப்பிய கீழ்கண்ட மூவருக்கு 1-ம் பரிசு ரூபா 750-00 இயும சமமாகப் பங்கிடடு ரூபா 250. வீதம் பரிசளிக்கப் பட்டதுடன் பவுண்டன் பேனாப் பரிசும் பெறுகிறார்கள். (1) மிஸ் கமலாவதி கதிரவேல், C/o, A. K. சுந்தரசாமி, லோவர் கிர்கலீஸ் (Lower, Kirklees) உடப்புசல்லாவ, (2) K நடராசா குருமபகட்டி, தெல்லிப்பளை (3)V முத்துரெட்டியார்,பொல்வத்தை தோட்டம், கட்டுகாஸதோட்டை.

2-ம் பரிசு (ரூபா 300-00) இரு பிழைகளுடன்விடைகள் அனுப்பிய கீழ்கண்ட 37பேருக்குச்சமமாகப்பங்கிட்டுத் தலைக்கு ரூபா 8-10 வீதம் பரிசளிக்கப்பட்டிருக்கிறது 1-2 மிஸ். கமல வதி கதிரவேல், உடப்புசல்லாவ. 3-12 K நடராசர, தெல்லிப்பளை 13 R நல்லையா தர்மகொட பலாலிகொட 14-29 K. சின்னததுரை விஜயகர்ஸனோர் நுவரேலியா, 30 S இராசையா நாவல்காடு அசகவேலி, 31-37 V முத்துரெட்டியார் கட்டுகாஸதோட்டை.

3-ம் பரிசு (ரூபா 200-00) மூன்று பிழைகளுடன் விடையனுப்பிய 94 பேருக்கு சமமாகப் பங்கிடடுத் தலைக்கு ரூபா 2-12 வீதம் பரிசளிக்கப்பட்டிருக்கிறது (இடமின்மைகாரணமாய் பெயர் ஜாபிதா பிரசுரிக்க முடியாததையிடடு வருந்துகிறோம். பெயர் விபரம் எமது காரியாலயத்தில் பார்வையிடலாம்.)

அநுதாபப்பரிசு (ரூபா 100-00) 1. P. மகாராஜா டிவி 7 திருக்கோணமலை, 2 R சிவனு எல்டன்தோட்டம் புவக்பிட்டிய. 3. K அம்பலவாணர் சுளிபுரம், 4 A S நாகராசா சங்கானை, 5. S P முத்தையா நுவரேலியா 6. K S மணியம் மகோ, 7. S. B சாமி வதனி. 8 V A நாகலிங்கம திருக்கோணமலை, 9 நா சினனத்துரை சாவகச்சேரி, 10 K கிருஷ்ணசாமி பருத்தித்துறை

போனஸ்பரிசுகள்: 1. ரூபா 100-00 K நடராசா குரும்பகட்டி தெல்லிப்பளை, (300 கூப்பன்கள் அனுப்பியவர்) 2. ரூபா 75-00 K சின்னத்துரை விநாயகர் ஸரோர் நுவரேலியா. (240 கூப்பன்கள் அனுப்பியவர்) ரூபா 50-00 V. முத்துரெட்டியார் கட்டுகாஸதோட்டை. (204 கூப்பன்கள் அனுப்பியவர்)

ஏஜன்ஸி பரிசுகள்: 1 ரூபா 10. போட்டிலோஸன் அன்ட் போட்டிமுரசு காரியாலயம உடஹந்தன்னை S P O 2 ரூபா 7-50 பூபாலசிங்கம் புக்டிப்போ யாழ்ப்பாணம், 3 ரூபா 5-00 V V மார்க்கண்டு n c. ரோட் திருக்கோணமலை

பரிசுத் தொகைகள் 20-12-47ல் அனுப்பப்படும். பங்கு பற்றிய நேயர்கள் அனைவ க்கும் எமது நன்றி உரித்தாகுக.

கலை அறிவுப் போட்டி நிர். 3.

ரொக்கப் பரிசு ரூபா 1800-00

1-ம் பரிசு ரூபா	850-00	1-ம் போனஸ் பரிசு ரூபா	100-00
2-ம் ,, ,,	350-00	2-ம் ,, ,, ,,	50-00
3-ம் ,, ,,	225-00	3-ம் ,, ,, ,,	3 -00
அநுதாபப்பரிசு 25பேருக்கு	125-00	4-ம் ,, ,, ,,	20-00

விசேஷ பரிசு ரூபா 50-00

முடிவு திகதி 14-1-48

பிரவேசக் கட்டணம் ஒவ்வொரு கூப்பனுக்கும் சதம் 50 (அணா 8) ரூபா 4-00 க்கும் அதற்குமேற்பட்ட தொகைக்கும் கூப்பன் அனுப்பு வர்கள் தாம அனுப்பும் கூப்பன்களின் தொகையைப்போல் இன்னொருமடங்கு பிரவேசக் கட்டணமின்றி அனுப்பலாம் விடைகளைத் தனிக்காகிதத்தில் எழுதியும் அனுப்பலாம். ஆசிரியரின் சரியான விடை யாழ்ப்பாணம் எக்சேஞ் வங்கியில் டிப்பாசிட் செய்யப்பட்டிருக்கிறது! ஒரே கவரில் அதிக கூப்பன்கள் அனுப்பிய

1	ந	ன்	றி
2	ச		டை
3	கோ	டா	
4		ழ்	க
5	க	ற்	
6		க்	கு
7	நெ		வு
8		த்	தி
9	கோ		ம்
10	ப		தி

நால்வருக்கு போனஸ் பரிசும் சரியான விடையனுப்பிய முதல்வருக்கு விசேஷ பரிசும் பரிசுகள் பெறாத மிகுதியில் 25 பேருக்கு அனுதாபப்பரிசும் வழங்கப்படும்.

ஆசிரியரின் விடையும் பரிசு பெற்றோர் விபரமும் 21-1-48 சுதந்திரனில் வெளிவரும்.

கூப்பன்கள் தேவையானோர் உடனே எமக்கு எழுதினால் இலவசமாய் அனுப்பப்படும்.

குறிப்புகள்:

1 "....மறப்பது நன்றன்று"
2 இது இடுவதை எல்லாரும் விரும்பார்கள்.
3 மரம் தறக்க இது உதவும்.
4 ஒரு சாரார் உணவுப் பங்கீட்டுத் திட்டம்..... என்கிறார்கள்.
5 "பிச்சை புகினும்.....நன்றே"
6 பஞ்சேந்திரியங்களுள் ஒன்று.
7 திருவள்ளுவரும் காந்தியும் கைக்கொண்ட தொழில்.
8 எத்தொழிலிலும் பெயர் பெற வேண்டுமாயின் இது அவசியம் வேண்டும்.
9 "ரோக்....,போரா முடியும்"
10 விஷயங்களை எழுதும்போது இது இதாய் எழுதுவதே நன்று

கலை அறிவுப் போட்டி நிலையம்,
மெயின் ஸ்ரீட். பருத்தித்துறை.
(Point-Pedro Ceylon)

"போட்டி முரசு"

வெளிவந்துவிட்டது!

கலை அறிவுப் போட்டி நிர். 3-க்கு ஆனித்தரமான விடை விமர்சனம். தனிப் பிரதி சதம் 25. ஐம்பது சதம் போஸ்ரல் ஓடர் அனுப்பினால் இரண்டு நடவைக்குரிய விமர்சனங்கள் அனுப்பப்படும்.

போட்டி லோஸன் காரியாலயம்,
உடஹந்தன்னை. S. P. O.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரியதரிசி நியமனத்தால் நெருக்கடி

முனிசிபல் சபைக்கு மந்திரியார் ஆலோசனை

கண்டி, டிச 13

கண்டி முனிசிபல் சபைக்கு ஸ்தலஸ்தாபனக் கமிஷன் ஒரு காரியதரிசியை நியமித்தது. ஆனால் முனிசிபல் சபையிட்ட ஓர் உத்தரவுப் பிரகாரம் அவரிடம் வேலையை ஒப்படைக்க முனிசிபல் கமிஷனர் மறுத்து விட்டார். ஆனால் காரியதரிசியோ ஒவ்வொரு நாட் காலையும் காரியாலயத்திற்குப்போய் கை எழுத்திட்டுவிட்டு அங்குள்ள ஓர் மேஜையில் உட்கார்ந்து எவ்வித வேலையும் இன்றி திரும்பிவருவது வழக்கமாயிருந்தது. இது கடந்த அக்டோபர் முதலாந்தேதி தொடக்கமாக நடந்துவருகிறது. அவருக்கு எவ்வித சம்பளமும் கொடுக்கப்படவில்லை.

இது விஷயமாக ஏற்பட்ட நெருக்கடியால் கண்டி மேயர் ஸ்தலஸ்தாபனக் கமிஷனிடம் முறையிட்டார்.

இது விஷயம் பற்றி இப்பொழுது ஸ்தலஸ்தாபன மந்திரி முனிசிபல் சபை நியமனத்தை அங்கீகரித்து, சம்பளத்தையும் செலுத்தவேண்டும் என்று ஆலோசனை கூறி உள்ளார்.

மோசடி செய்ததாக இலங்கை வாசி கைது

வேலை தருவதாக கூறி பணத்தை ஏப்பம் விட்டாராம்

சென்னை, டிச. 13

கொழும்பு வாசியான ஏ. பி மணி எனபவர் குற்ற இலாகா இன்ஸ்பெக்டர் ஸ்ரீ பாசிததாலை மௌண்ட் ரோடில் உள்ள ஒரு ஹோட்டலில் கைது செய்யப்பட்டார். தாம் அமெரிக்காவில் இருக்கும் சான்பிரான்ஸிஸ்கோ டிரேடிங் கார்ப்பரேஷனுடைய கிளை ஆபீஸ் மானேஜர் என்று சொல்லிக்கொண்டு மணி குமாஸதா வேலைக்கு மனுக்களை அனுப்ததாகவும் பலரிடமிருந்து செக்யூரிடி வாங்கி அந்த பணத்தை சொந்தத்திற்கு உபயோகப்படுத்திக் கொண்டதாகவும் மேற் சொல்லப்பட்ட கம்பெனி ஒன்றும் இல்லை என்றும் கூறப்படுகிறது. மணி மீது வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

இலங்கை கல்வி சம்பந்தமான கஷ்டங்கள்

இரண்டு பெண்டாட்டிக் காரன் நிலையாம்

கம்பஹா, டிச 13

மினுவாங்கொடை மத்திய பாடசாலைப்பரிசளிப்புவிழாவில் பேசுகையில் உதவிக் கல்வி அதிகாரி திரு அருணந்தி பின்வருமாறு குறிப்பிட்டார். இன்று எமக்குள்ள பிரச்னை இரண்டு பெண்டாட்டிக்காரன் பிரச்னை போல் இருக்கிறது. அவர்களில் ஒருத்தி பட்டணத்தில் வளர்ந்து கல்வி பயின்றவள்; மற்றவளோ நற்குணம் படைத்த கிராமப் பெண் போன்ற நிலையில் இருக்கிறது. இவ்விரு பெண்களையும் அவரவர்களுக்கு உரிய இடத்தில் வைத்து இதமாக நடத்துதல் வேண்டும்.

தாய்மொழி மூலம் கல்வி கற்பிப்பதுபற்றிப் பேசுகையில் ஆங்கில-தமிழ்ப் பயிற்சி, ஆங்கிலம்-சிங்களப் பயிற்சி, ஆங்கில-சிங்கள-தமிழ்ப் பயிற்சி ஆகியவை பெற்றுள்ளவர்கள் கிடைப்பது அரிதாயிருப்பதாகப் பிரஸ்தாபித்தார்.

ஸ்ரீமதி அருணந்தி பரிசுகளை வழங்கினார்.

வெள்ளத் தடுப்பு நிபுணர்

சீக்கிரம் இலங்கை வருவார்

கொழும்பு, டிச. 14

வெள்ளப் பாதுகாப்பு நிர்மாண நிபுணரான ஈ. வி. ரிச்சாட்ஸ் என்பவர் சீக்கிரம் இலங்கை வருவார் என்று தெரிகிறது. அவர் அரசாங்க அழைப்பின் பேரில் இலங்கை வருகிறார். ஆற்று வெள்ளங்களைக் கட்டுப்படுத்துவது எப்படி என்பது பற்றி அவர் ஓர் அறிக்கை சமர்ப்பிப்பார் என்று தெரிகிறது.

குமாரி எஸ். என். சரஸ்வதி கோஷ்டியார்

கொழும்பில் அளித்த அபூர்வ இசை நாட்டிய விருந்து

கொக்குவில் இந்துக் கல்லூரிக் கட்டிட நிதியின்பொருட்டு கச்சேரி முதலிய இசை நாட்டிய நிகழ்ச்சிகள் நடத்துப் நோக்கமாகக் கொழும்பிற்கு வந்த குமாரி எஸ். என். சரஸ்வதி கோஷ்டியார் இரண்டு கச்சேரிகள் நடத்தினார்கள் முதலாவது கச்சேரி வெள்ளவத்தையிலுள்ள சென். பீடர்ஸ் கல்லூரி மண்டபத்தில் நடந்தது. அன்றைய நிகழ்ச்சியைக் கண்டு யாவரும் வியப்படைந்தனர். இந்தக் கோஷ்டியைச் சேர்ந்தவர்களனைவரும் சிறு பிள்ளைகள், பள்ளி மாணவர்கள்; அநேகர் குழந்தைகள் சிறு குழந்தைகளிடத்துப் பெரிய கலையாற்றலைக் காணும்போது யாருக்குத்தான் வியப்பும் ஆனந்தமும் பொங்காது? மலர்ச்சி பெறுவதற்குரிய சந்தர்ப்பம் வாய்க்காமையாலும் ஊக்குப்படுத்தும் சாதனங்கள் இல்லாமையாலும் எவ்வளவோ கலையாற்றல் நம் தேசத்தில் மறைந்து மங்கிப் போகின்றது என்பதையும் இக்குழந்தைக் கோஷ்டியாரின் அரிய செயல்கள் திரை நீக்கம் செய்து காட்டலாயின.

இரண்டாவது கச்சேரி சென்ற திங்கட்கிழமை மாலை ஆறரை மணியளவில் கொழும்பு நகர மண்டபத்தில் நிகழ்ந்தது. அன்றைக்குப் பொதுக் கூட்டம்; நிகழ்ச்சிகளுமே முதல் நாளிலும் பார்க்க மிக்க சோபையோடு விளங்கின. உடை, கோலம், மேடையமைப்பு, ஒளிமுறை முதலியன யாவும் மிக்க திருத்தம் பெற்றிருந்தன.

நாட்டிய நிகழ்ச்சிகளிலே சிறப்பாக குறிப்பிட வேண்டியவை பாம்பாட்டி நடனமும், சகுந்தலை நாடகக் காட்சியும் அரிவிவெட்டு நடனமுமே யாம். பாம்பாட்டி நடனம் யாழ்ப்பாணத்திலே முதல் பரிசு பெற்றதாகக் கேள்வி. இந்த நடனம் மிகவும் அழகாக இருந்தது; இதில் நடித்தவர்களுக்குப் பரிசு இன்னும் கொடுக்கலாம்.

"நடமாடிக்திரிந்த" என்ற பாட்டிற்கு அபிநயம்பிடித்த பிள்ளை, அப்பாட்டின் பொருளைக் கண்ணிலும் கரத்திலும் வடித்துத்தர முயற்சித்த ஆடத் திறமை பாராட்டுக் குரியது. நாட்டிய நிகழ்ச்சிகள் சிகரமடைந்தது, குழந்தை ஜெயதேவியின்நடனத்திலேயே என்று சொல்ல வேண்டும். ஐந்து வயதும் நிரம்பாத இச்சிறு குழந்தை "ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே!" என்ற பாட்டிற்கு உணர்ச்சி ததும்புப அபிநயங்களைக் காட்டிக்காட்டி ஆடியஆனந்தக்காட்சிகண்டோர் உள்ளங்களை யெல்லாம் பறித்துக் கொண்டது. 'வீணிலே உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்வோம்' என்ற அந்தப் பாட்டில் வரும் கருத்தினை அவள் அபிநயித்த போதுதான் இந்தக் குழந்தைக்கு நாட்டியக் கலை இயல்பாய் அமைந்துள்ளது என்பது தெளிவானது. நிர்தனையின் பூரண சொரூபத்தை அவளுடைய நடிப்பில் கண்டு மகிழ்ந்த மகிழ்ச்சி மறக்க முடியாத மகிழ்ச்சி.

குமாரி எஸ். என். சரஸ்வதியின் சங்கீத ஆற்றல் மிகவு உயர்ந்த நிலையிலுள்ளதென்பதற்குச் சான்று பகர்ந்தன இவர் இன்று பாடிய பாட்டுகள், மிகவும்மதுரமான குரலில், தேசியக்கீதங்களை உணர்ச்சி ததும்பப் பாடினார். இராகம் பாடும்போது கம்பீரததோடு வசீகரமும் மதுரமுங் கலந்து வரும் கற்பனை இழைப்புகள் மனதை அள்ளின நல்லஉணர்ச்சியும் கலைதேர்ச்சியும் இவரிடத்தில் காணக்கிடந்தன.

குமாரி எஸ். என். பரமேஸ்வரி மிருதங்கம் வாசித்தார்கள். தோற்றத்தில் எவ்வளவு அடக்கமாகக் காணப்படுகிறாரோ அவ்வளவு அடக்கததை அவரடைய வாத்திய வாசிப்பிலும் காணக்கூடியதாயிருந்தது. விரல்களே பேசின; மற்ற அங்கங்களெல்லாம் விரல்களின் வினைத்திறத்தில் ஈடுபட்டவைபோல் அசைவற்றிருந்தன. உண்மையான அடக்கச் சிறபுவாய்ந்த கலைப்பண்பினை இவரிடத்துக் கண்டு களிக்கக் கூடியதாயிருந்தது. தாள ஞானமும் அஷர எழிலும் காடசியளித்தன.

இந்தக் குழந்தைக் கோஷ்டியார் அன்று அளித்த இசை நாட்டிய விருந்தினை அபூர்வ விருந்தென்றே சொல்லவேண்டும். முன்னொரு பொழுதும் நிகழாத தொன்று நிகழ்வதையே அபூர்வம் என்று சொல்வது. சிறு பிள்ளைகள் சேர்ந்து இத்தகைய உயர்தரக் கச்சேரியான்றினை இதற்குமுன் கொழும்பிலே நடத்தியது கிடையாதாகையால் இதனை அபூர்வ நிகழ்ச்சியென்று சொல்வதில் குற்றமில்லையல்லவா. ஆண்டுக்கொருமுறையாகுதல் இக்கோஷ்டியார் கொழும்பிற்கு வந்து பேர்தல் வேண்டுமென்பதே இங்குள்ளோர் பலருடைய ஆசையாய் விட்டது.

'தலைகுனிந்து தாள்பணிந்து பிச்சை கேட்க தமிழன் தயாராயில்லை'

[1-ம் பக்கத்தொடர்ச்சி]

மாகுமா? இம் முறைக்கு அத்தியாவசியமான ஏதுக்கள் இல்லை.

இந்நிலையிலிருந்து நாங்களாகவேண்டுமானால் எங்களெல்லோருக்கும் வசதியானதும் எங்களுடைய சுய மரியாதையைப் பாதிக்காததுமான ஒரு அரசாங்க ஆட்சி முறையைப் பல சங்கியதாரும் ஒற்றுமையாக நிறுவ வேண்டும். இதற்காக எந்த முற்போக்காளரோடும் நாங்கள் ஒற்றுமையாக உழைப்போம் என்பதை வெளிப்படுத்துகிறேன் ஆனால் ஒரு சிலர் தங்களுக்கும் தங்கள் குழுவினருக்கும் சகாக்களுக்கும் மாத்திரம் ஏற்றதும் பொது மக்களைப்பாதிக்கக்கூடியதுமான ஒரு அரசியல் முறையில் இறங்கினால் அவர்களை எப்போதும்எதிர்ப்போம் அவர்களோடு என்ன ஒற்றுமை?

முற்போக்கான காரியங்களிலும் பிரதானமான சந்தர்ப்பங்களிலும நாங்களும் மற்றும் முற்போக்கான கட்சிகளுடன் ஒற்றுமையாக இருந்திருக்கிறோமென்பதை இங்கு சபையிலிருக்கும் திரு தகநாயக்கா ஏற்றுக் கொள்ளுவார், சிங்கள பாமரர்களோடு எங்கள் பொது மக்களும் ஒற்றுமை பாராட்டி வாழ்வதுதான் நல்லது. எங்களுடைய சுயமரியாதையை விற்காமல் சம அந்தஸதில் எப்பொழுதும் அவர்களோடு ஒன்றுபட இப்போது நாங்கள் சம்மதமாயிருக்கிறோம் அப்படியல்லாத மந்திரிசபையில் தமிழன் இல்லாவிட்டாலும் பாதகமில்லை மந்திரி சபையில் பதவிகளின் எண்ணிக்கையில் ஒன்றுமில்லை எங்களைப் புறக்கணிப்பது அல்லது இழிவாகபாவித்தல்தான் விரும்பத்தகாதது ஆங்கிலத்தை விலக்கி அதனிடத்தில் சிங்களத்தை மாத்திரம் அரசாங்க பாஷையாக்குவது போன்ற காரியங்களை எப்பொழுதும் தமிழ்க் காங்கிரஸ் எதிர்க்கும் எங்களுடைய விருப்பங்களையும், யோசனைகளையும் புறக்கணித்தால் எங்களை எதிர்க்கட்சியிற்றான் காணலாம்.

வட இலங்கையிலுள்ள தமிழரின் சமுதாய முறைகளையும் கலையையும் நாங்கள் பேணவேண்டியவர்களாக இருக்கிறோம் இப்படியிருக்க யாழ்ப்பாணத்தோடு தொடர்பு இல்லாதவர்களும் அவர்களோடு நெருங்கிப் பழகியவர்களது குறை நிறைகளையறியமாட்டாதவர்களுமான ஒரு சில தமிழர் பிரதிநிதியை ஏற்படுத்த முயலுகிறார்கள். நாம் சில சமயங்களில் செய்வது அவர்களுக்குப் பிடிக்காமலிருக்கும். அத்தருணத்தில் அவர்கள் பொறுமையை இழக்காது இருக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

நாம் எமமை அனுப்பியவர்களின் ஊழியர்கள், வாக்காளர்கள் தான எங்கள் எஜமானர்கள் அவர்கள் எண்ணப்படிதான் நாம் நடப்போம், அவர்களுக்குக் கெடுதலாக நாம் ஒன்றும செய்யமாட்டோம் என்பதை நாம் திட்டமாகக் கூறுகிறோம்."

திரு. எஸ். ஜே. வி செல்வநாயகம் பேசியதாவது:—

ஒரு யுத்தம் முடிந்ததும் அதில் மடிந்த ஊர் பெயர் தெரியாத சாதாரண படை வீரர்களுக்குச் சிலை நிறுவுவது போலவுனறு எங்களைக் கௌரவிப்பதால் எங்களைத் தேர்ந்தனுப்பிய ஒவ்வொரு பொது மகனையும் மகளையும் எங்கள் மூலமாகக் கௌரவிக்கிறீர்கள். அரசியல் விஷயததில் அவர்கள் தான் முக்கியமானவர்கள்.

இலங்கையின் மலைப் பிரதேசங்களிலும், தென் பகுதிகளிலும் பொது ஜனங்கள் விழிதிருக்கின்றனர். மலைப் பிரதேசங்களிலுள்ள தோட்டத் தொழிலாளர் ஆவேசததோடு கார், பஸ் முதலியவற்றைக் காதகிராது கால் நடையாகத் திரள் திரளாகச் சென்று தங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தனர். தென்னிலங்கையிலும் இதே விழிப்பினாற்றான் இங்கு சமுகமாயிருக்கும் திரு தகநாயக்கா போன்றவர்கள் அனுப்பப்பட்டிருக்கின்றனர்.

தமிழ் காங்கிரஸிலுள்ளவர்கள் வட இலங்கையிலுள்ள பாமர மக்களுக்கு அவர்களுடைய அரசியல நிலையை வற்புறுத்தி எடுத்துக்காட்டினார்கள். அவர்கள் காங்கிரஸ் அங்கத்தவர்களைத் தேர்ந்தெடுத்தனர். இனி நாங்கள் அவர்களுடைய ஏவலாளிகள். அவர்கள் சம்மதத்துடன் தான் எதையும் செய்வோம்.

கொழும்பிலேயுள்ளவர்கள் வட இலங்கையிலுள்ளவர்களை அறியார், ஆகையால் இவர்கள் தமிழர் என்ற ஹோதாவில் எதையும் வாய்க்கு வந்தபடி யெடுததுக் கூறுதல் முறையல்ல

திரு கே. கனகரத்தினம் பேசியதாவது:-

ஆயிரக் கணக்காக இங்கு குடியமி எங்களெல்லோரையும் கௌரவித்து வரவேற்றதற்கு நன்றியறிதலுடையவனாயிருக்கிறேன் யாழ்ப்பாணத தேர்தலில் வெற்றிபெற்ற அன்றிலும் பார்க்க இன்று அதிக சந்தோஷப்படுகிறேன். 31 வருடங்களுக்குமேல் உங்கள் மத்தியிலிருந்து உங்கள் நம்பிக்கைக்குப் கௌரவத்திற்கும் ஆளானமை தான் இதற்குக் காரணம்.

அரசாங்க சேவையிலிருந்த கிடைத்த அனுபவததைக் கொண்டு அதிக அரசாங்க உத்தியோகஸ்தர் வசிக்கும் இப்பகுதியிலுள்ள குறைகளை எப்போதும் தீர்க்த வைக்க ஆயத்தமாயிருக்கிறேன்.

நான் எக்காலத்திலும் சாதி மதபேதம் பாராட்டியவனல்லன். இன்னும் அக்கொள்கையையே கடைப் பிடித்து இலங்கையிலுள்ள எல்லா மக்களது நன்மைக்காகவே என்னாலானதைச் செய்வேன.

திரு எஸ சிவபாலன் பேசியதாவது:-

"எல்லா ஜாதியாரும் தங்கள் தங்கள் கலாச்சாரங்களைக் காக்கவும் சமூக நிலையைத் திருத்தவும் ஒவ்வொரு சங்கங்களை ஏற்படுததியிருக்கும்போது நாங்களும் அதே எண்ணத்துடன் தமிழ்க் காங்கிரஸை நிறுவினோம். எங்களுடைய முன்னேற்றத்திற்கு அவர்கள் முட்டுக்கட்டை போடாவிட்டால் தமிழ்க் காங்கிரஸே தேவையில்லை.

இதற்கு எல்லா ஜாதிப் பிரதிநிதிகளும் ஒன்று சேர்ந்து தங்கள் குறைகளைத் தங்களுக்குள் பேசி சமரசப்படுத்துவதுத்தி. எது எப்படியாயினும் மற்றும் தமிழ்க்காங்கிரஸை அங்கத்தவர்களோடு வாழ்வும் தாழ்விலும் ஒத்துழைப்பேனென்பதைத் திடமாகக் கூறுகிறேன்.

திருவாளர்கள் இராமலிங்கம், வன்னியசிங்கம், குமாரசுவாமி முதலியவர்கள் பேசிய பின் திரு தகநாயக்கா பேசிய போது திரு பொன்னம்பலத்தின் தலைமையில் எதிர்காலத் தொழிலாளர்களின் போராட்டம் நடைபெறும் காலதை தாம் எதிர்பார்த்திருப்பதாகக் கூறினார்.

திரு பொன்னம்பலத்தை போன்ற வேறு அரசியல் ஞானி இலங்கையில் இல்லை என்றும் புகழ்மாலை சூட்டினார்

ரூத்தலுக்கு 15 சதம் உயர்வு

கொழும்பு, டிச. 15

புதிய வரி விகிதததின்காரணமாக வெண்ணெயின் விலை ரூதலுக்கு 15 சதம் அதிகமாகுமெனவும் ஆனால் அடுதத ஏப்ரல் வரை இவ்விலை உயர்த்தப்படமாட்டாதெனவும் நிதி மந்திரி ஜயவர்தனா நேற்று முன்தினம் தமது பேச்சின்போது குறிப்பிட்டுள்ளார்.

பெட்ரோலுக்குப் பதில் தேங்காய் எண்ணெய்

யந்திரங்களை ஓட்ட புதிய வழி கூறுகிறார் பேராசிரியர்

கொழும்பு, டிச. 14

எஞ்ஜினீயரிங் சங்க வாருடாந்தக் கூட்டத்தில் டெக்னிக்கல் கல்லூரித் தற்காலிக பேராசிரியர் டி. முக்கர்ஜி சமர்ப்பித்துள்ள அறிக்கையில் டீசல் யந்திரங்களை தேங்காய் எண்ணெயின் உதவியால் ஓட்ட முடியும் என்ற அபிப்பிராயத்தைததெரிவித்துள்ளார். இது சம்பந்தமாகப் பல வெற்றிகரமான பரீட்சைகள் செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

வெளியூரிலிருந்துவரும் எண்ணெய் வருகையில் தட்டுப்பாடு ஏற்படும்போது தேங்காய் எண்ணெயை உபயோகித்து மின சார யந்திரங்களையும் போக்குவரவு சாதனங்களையும் இயக்க முடியுமென அவர் எண்ணுகிறார்

உங்கள் நோய் எதுவானாலும் சரி

உத்தரவாதமாக தீர்த்துதருகிறேன்.

வாழ்க்கையைப் பாழ்படுத்தும் கொடூரமான தொற்று வியாதி உள்ளவர்கள் தங்களுக்குப் பின்னால் நோயும் கஷ்டமும் அனுபவிக்கும் சந்தானததைத் தவிர வேறொன்றையும் நிலைக்கச் செய்வதில்லை. எனவே உங்களைப் பீடித்திருக்கும் கொடிய பிணிகளை அகற்றி சுகத்துடன் வாழ என்னுடன் கலந்து ஆலோசியுங்கள்.

அஸமா, காசம், க்ஷயம், மூலம், வாதம், குஷ்டம் என்றும் தீராத நோய் எதுவானாலும்சரி உத்தரவாதமாய் தீர்த்துதருகிறேன். நோய்எதுவானாலும் பொருத்தம் பேசியும் தீர்த்து கொடுக்கப்படும் நான் எனது கிளை வைத்தியசாலை நம்பர் 23/7 ஸ்டான்லி ரோட் யாழ்ப்பாணம். இம்மாதம் 20-ம் திகதிவரை தங்கி இருப்பேன்.

Ayur Dr. V. K. S, செல்லப்பாபிள்ளை M. A. M. S. (கல்கத்தா)

சிவானந்த சித்தர் வைத்தியசாலை

ஹெட் ஆபீஸ்: 92 செட்டியார் தெரு, கொழும்பு.

பிராஞ்சு ஆபீஸ்கள்:

768 லோவர் வீதி, பதுளை.

23/7 ஸ்டான்லி ரோட், யாழ்ப்பாணம்.

கிங்ஸ்லியில் தினசரி மாலை 6 மணி, இரவு 9-30 மணிக்கும் சனி, ஞாயிறு மெட்னி 2-30 மணிக்கும்

பார்க்கப் பார்க்க பரவசமூட்டும் பாவையர் நடனங்கள், செவிக்கினிய கீதங்கள், கண்ணுக்கினிய காட்சிகள், உள்ளங் கவரும் உயரிய நடிப்புகள் நிறைந்த

கன்னிகா

5-வது வாரமாகக் காண்பிக்கப்படுகிறது

என். எஸ். கிருஷ்ணன், டி. ஏ. மதுரம், டி. ஈ. வரதன், எம்.எஸ், சரோஜினி, எம். ஆர். சந்தானலக்ஷ்மி, காளி என் ரத்தினம் ஆகியோர் திறம்பட நடித்தது

கிரவுன் தியேட்டர் ஸ்கின்னர்ஸ் ரோடு, மருதானை.

தினசரி மாலை 6-15, இரவு 9-30 மணிக்கும், சனி, ஞாயிறு மெட்னி 2-30 மணிக்கும்

சித்ரகலாவின் உன்னத தயாரிப்பு

முதல் நம்பர் நடிகர்கள் எடிஜெயமான, ருக்மணி தேவி மற்றும் பலர் நடிக்கும்

"இழந்த உறுதி"

என்னும் வர்ணம் தீட்டப்பட்ட முதல் சிங்களப் படம்

புரிய இயந்திர அமைப்புகளுடன் இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

அற்புதமானது! ஆனந்தமளிப்பது!!

மனதிற்கு பரவசமும் உல்லாசமும் ஊட்டுவது

இப்படியாக பாலர் முதல் பெரியோர்வரை ஏகோபித்து புகழ்வதெல்லாம்

மேனகா மார்க் லொசிஞ்சர்களே!

மேனகா மார்க் லசிஞ்சர்கள் ஒவ்வொன்றிலும் தேகத்திற்கு வலிமை அளிக்க வல்லதும், இரத்த விருத்தியுண்டாக்குவதுமான குளுக்கோஸ் எனும் சத்து சேர்ந்திருக்கிறது. அத்துடன் மனதிற்கு நல்மணமும், நற்சுவையும் கொடுக்கக்கூடிய பழரசச் சத்தும் சேர்ந்து இதற்கென்றே இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட நிபுணர்களைக்கொண்டு சாஸ்திரமுறைப்படி தயாரித்து யாவருக்கும் எளிதில் கிடைக்கக்கூடிய விதத்தில் சரசமான விலையில் டின்களில் அடைத்து விற்கப்படுகின்றது.

மேனகா மார்க் லொசிஞ்சர்

எல்லா முக்கியவியாபாரிகளிடமும் கிடைக்கும்

தயாரிப்பாளர்கள்:-

ராஜா இன்டஸ்ரியல் வேர்க்ஸ்,

71, புதிய சோனகத் தெரு, கொழும்பு.

Telegram: "SWEETS" Telephone: 2737

கீழ்க்காணும் வியாபாரிகளை நமது முக்கிய விநியோகஸதர்களாக நியமித்திருக்கிறோம்.

V. T. செல்லையா அன் கோ, குருநாகல்
K. முருகேசு அன் கோ, " "
மனோன்மணி ஸ்டோர், கேகாலை Kegalle.
W. E. M. பாக்ஷா சாகிப் அன் கோ, நாவலப்பிட்டி
N. B. அந்திரிஸ சில்வா அன் கோ, கம்பளை
M. சேகு அலி ராவுததர் அன் கோ, வத்துகாமம்
A. S. M. முகைதீன் அன் கோ, மாத்தளை
M. T. செல்லையா அன் கோ, கெக்கிராவ
K. சிவகுநாதப்பிள்ளை அன் சன்ஸ், யட்டியாந்தோட்டை
S. நாகமுத்து, ருவான்வெளை.

சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட்டிற்காக, 1947-ம் வருஷம் டிசம்பர் மாதம் 15-ம் தேதி இப்பத்திரிகை 194 ஏ, தட்டாரத்தெரு, கொழும்பு சுதந்திரன் அச்சுக்கந்தோரில் அச்சிட்டு கொழும்பு மெயின்ஸ்டிரீட்டில் இருக்கும் சிங்காரம் நடராசா அவர்களால் வெளியிடப்படுவது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org